# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

ஜுன் 2001 ஜீவியம் 7 மலர் 2

## இம்மாத மலரில்..........


| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| யோக வாழ்க்கை விளக்கம் IV | 2 |
| இம்மாதச் செய்தி | 7 |
| லைப் டிவைன் | 8 |
| சிறு குறிப்புகள் | 12 |
| பகவானுடைய இதர நூல்கள் | 14 |
| அன்பர் கடிதம் | 16 |
| லைப் டிவைன் - கருத்து | 19 |
| அஜெண்டா | 21 |
| சாவித்ரி | 23 |
| அன்னையின் சக்தி கன்ஸர்வேட்டிவாக செயல்படாமல், கிரியேட்டிவாக, முன்னேற்றமாகச் செயல்படும் | 25 |
| கன்சல்டன்சி | 39 |
| திருவுருமாற்றிய தெய்வீக அன்னை | 41 |
| பிரார்த்தனை பலிக்க வேண்டும் | 51 |


* * *

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-

## யோக வாழ்க்கை விளக்கம் IV

கர்மயோகி

**646) நம்மால் பயன்படுத்தும் அளவை மீறிய சக்தி எழுந்தால், அதைத் தீவிரம் என்கிறோம். அதையே இறைவனை நோக்கிச் செலுத்தினால் அது பக்தி, ஆர்வமாகிறது.**

***ஆண்டவனை நோக்கிச் செல்லும் அளவு மீறிய சக்தி பக்தியாகும்.***

மனிதர்கள் பல வகையினர். சாதிக்கப் பிறந்தவர் சிலர். அனுபவிக்கப் பிறந்தவர் பலர். அவையின்றி வாழப் பிறந்தவர் பெரும்பாலோர். எதுவுமின்றி வாழ முடியாமல் தவிக்கப் பிறந்தவர் ஏனையோர்.

தீவிரம் சாதிக்கப் பிறந்தவருக்குடையது. தீவிரமின்றி சாதனையில்லை. தீவிரத்தின் அடிப்படை சக்தி. வாழ முடியாதவன் சக்தியற்றவனாகவும், வாழ்பவன் அளவோடுள்ள சக்தியையும், அனுபவிக்கப் பிறந்தவன் சற்று அதிகமான சக்தியையும் உடையவனாக இருப்பான். சாதிப்பவனுக்கு அடக்க முடியாத சக்தியிருக்கும். சோர்ந்து உட்காரும் மனிதர் சாதித்ததை உலகம் அறிந்ததில்லை.

அளவு கடந்து பீறிட்டெழும் சக்தியைச் சாதனையாக அனைவரும் மாற்றுவதில்லை. அனுபவித்து வீணாக்குபவருண்டு. அறிவில்லாமல் சிதற விடுபவருண்டு. முறைப்படுத்தாமல் (without organising) சக்தி சாதனையாக மாறாமல் போவதுண்டு. இவர்கள் சொல்ல நாம் கேட்பது, “எவ்வளவோ வேலை செய்தேன். பட்டபாடு பெரியது. கடைசி நேரத்தில் ஒருவன் வந்தான். பலனை எல்லாம் அவன் கொண்டு போய்விட்டான்”, என்பது போன்றது. சக்தி சாதனைக்கு அஸ்திவாரமாகும். அதுவே பலனை முழுவதும் பெற்றுத் தாராது.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Energy | - | Force<br>Direction<br>நேர்ப்படுத்துதல் | - | Power<br>Organisation<br>முறைப்படுத்துதல் | - | Results<br>Skill<br>திறமை |
| சக்தி | - | செயலாற்றும் சக்தி | - | பலன் தரும் சக்தி | - | பலன் |



பீறிட்டெழும் சக்தியை நேர்ப்படுத்தினால் செயலாற்றும், முறைப்படுத்தினால் பலன் தரும். திறமை பலனைப் பயன்படுத்தும் வகையாக மாற்றித் தரும். தானே வளரும் குழந்தையைப் படிக்கச் சொன்னால் அதன் சக்தி படிப்பை நோக்கிப் போகிறது. எல்லாப் புத்தகங்களையும் படித்தால் பொது அறிவு வளரும். குறிப்பாக எதுவும் செய்ய முடியாது. முறையாகச் செயல்படும் பள்ளியில் போட்டால் பட்டம் என்ற பலன் தரும் வகையில் அதன் சக்தி உருவாகும். பையன் தன் திறமையைப் பயன்படுத்திப் பட்டம் என்ற பலனைப் பெறலாம்.

பக்தி, ஆர்வம் (aspiration) என்பதற்கு மனித சக்தி அளவுகடந்து தேவைப்படுகிறது. வாழ்க்கைப் பலன் பெற அதைப் பயன்படுத்தாமல், இறைவனை அடைய அதைத் திருப்பினால் அது ஆர்வமாக மாறி, எந்நேரமும் மனம் இறைவனை நினைக்கும். ஆர்வம் முதிர்ந்தால், உடலெல்லாம் உள்ள சக்தி உள்ளத்தில் சேர்ந்து பக்தியாகி ஆர்வம் கனலாக மாறும். பக்தி சிறந்தால் நெஞ்சம் திறந்து, அதன் பின்னுள்ள சைத்தியம் வெளிப்படும். சைத்தியம் இறைவனை மட்டும் நோக்கிப் போவது என்பதால், நம் ஜீவன், வெளிப்பட்ட சைத்தியத்தால் வழி நடத்தப்பட்டு இறைவனை நோக்கிச் செல்லும். பக்தி யோகம் பலிக்க லயம் தேவை. லயித்துவிட்டால் நெஞ்சில் கனலெழுந்து நெஞ்சமே சிவந்துவிடும். ஞானியின் முகம் தேஜஸ் நிரம்பியுள்ளதுபோல், பக்தன் நெஞ்சம் சிவந்து காணப்படும்.

❊ ❊ ❊

**647) ஆர்வம் ஒரு பகுதியிலிருந்தாலும், அடுத்த பகுதிக்கு அதைக் கொண்டு போக முனைந்தால் அது பாதியில் தீர்ந்துவிடும். மனத்தின் ஆர்வத்தை உடலின் ஆர்வமாக்க முனைந்தால் முதலிலேயே தீர்ந்துவிடும்.**

***உடல் பெரியது, மனம் சிறியது.***

ஓடியாடி வேலை செய்பவர் சுறுசுறுப்பாக இருப்பவர். இவருடைய சக்தி உடலின் சக்தி, உணர்வின் சக்தி. 8மணி, 10 மணி என

சளைக்காமல் அதுபோல் வேலை செய்பவரை, நாற்காலியில் உட்கார்ந்து எழுத்து வேலை செய்யச் சொன்னால், இரண்டு மணி நேரத்தில் களைத்துவிடுவார். கொட்டாவி வரும், தூக்கம் வரும். மாலை வேலை செய்ய தெம்பிருக்காது. செய்தால் வேலையில் அதிகத் தவறு வரும். உடலால் சுறுசுறுப்பாக வேலை செய்பவர், அதே சக்தியை மனதால் பயன்படுத்தினால் (physical energy converts into mental energy) மனம் அதிக சக்தியைக் கேட்பதால், சீக்கிரம் களைப்பு வரும். 5 ரூபாய் நோட்டுக் கற்றையை 50 ரூபாய் நோட்டாக மாற்றினால், கற்றை சிறியதாகும். செயலைப் பொறுத்தவரை மனம் பெரிய கருவி, உடல் சிறிய கருவி.

ஆர்வத்தைப் பொறுத்தவரை மனம் சிறியது, உடல் பெரிய கருவி என்பதால் மனத்தின் ஆர்வம் உணர்வின் ஆர்வமாகவோ, உடலின் ஆர்வமாகவோ மாறினால் அது அளவில் குறைந்து சீக்கிரம் தீர்ந்துவிடும்.

உடல் இருளின் கருவி. காயம் பொய்யடா என்று முன்னோர்கள் சொல்லியதை ஏற்றுக்கொண்ட ஸ்ரீ அரவிந்தர், பொய் நிறைந்த காயம் இருள் நிறைந்ததானாலும், மனத்தைவிடப் பெரிய கருவி எனக் கண்டு, உடல் புறக்கணிக்கப்பட வேண்டியதன்று, திருவுரு மாற்றமடைய வேண்டியது என முடிவு செய்தார். மேலே சொல்லியதை வேறு வகையாக விளக்கினால், ஒளி நிறைந்த மனம் சிறிதளவு ஆன்மீக சக்தியால் திருவுருமாற்றமடையும், இருள் நிறைந்த உடல் திருவுருமாற்றமடைய அதிக ஆன்மீக சக்தி வேண்டும் என்றாகும்.

பூரண யோகத்தின் அடிப்படைகளில் ஒன்று உடலின் முக்கியத்துவம். தனக்குப் பின் வெளியிட வேண்டும் என அன்னை கூறியவை 13 வால்யூம்களாக வந்துள்ளன. அவற்றில் அன்னை உடலின் யோகம் Yoga of the body, உடல் திருவுருமாற்றத்தைத் தாம் மேற்கொண்டதை விவரிக்கின்றார்.

நோய் மூலமாகவே உடல் திருவுருமாற்றமடையும் என்ற அன்னை உடல் திருவுருமாற்றத்தை நாடினால் தான் கற்றதை எல்லாம் மறந்து புதியதாக கற்கவேண்டும் என்கிறார். சாப்பிட, நடக்க, பேச, எழுத, பார்க்க, கேட்க நாம் கற்றவற்றை உடல் மறந்து, மீண்டும் புதிய



ஜீவியத்தின் மூலம் அவற்றைப் புதியதாக கற்ற வகையை அன்னை விளக்குகிறார்.

உடல் திருவுருமாற்றமடைந்த பின்னரே பூரண யோகம் பூர்த்தியாகும். அதை ஸ்ரீ அரவிந்தர் மேற்கொள்ளவில்லை. அன்னையை மேற்கொள்ளச் சொன்னார். அன்னையின் திருவுடல் மட்டுமே உலகில் அதற்குத் தயாராக உள்ளது என்றார். அதை மேற்கொண்ட அன்னை உடல் வேதனையால் ஓலமிடுகிறது. இந்தத் திருவுருமாற்றத்தை நான் பிறருக்குச் சொல்லமாட்டேன். என்னால் அடுத்தவரை இதை மேற்கொள்ளச் சொல்ல முடியாது என்றார்.

❋❋❋

**648) தீர்ந்தபின் ஆர்வத்தை உற்பத்தி செய்வது பெரும்பாடு. மனம் மறந்துவிடும். வற்புறுத்தினால் "வற்புறுத்துவது தவறு" என மனம் பதில் சொல்லும். அல்லது "புரியவில்லை" என்று சொல்லும்.**

***ஆர்வம் தீர்ந்தால் செய்வதொன்றில்லை. மனம் வற்புறுத்த அனுமதிக்காது.***

ஒரு புத்தகத்தை இரண்டு மூன்று முறை படித்தபின் புரியாவிட்டால், மீண்டும் ஆர்வமாக அதைப் படிப்பது சிரமம். புத்தகமே மறந்துபோகும். மீண்டும் நம்மை நாமே வற்புறுத்திப் படிக்கச் சொன்னால், இப்படி வற்புறுத்துவது தவறு என்று தோன்றும்.

நம் உடலில் சக்தி தீர்ந்த பிறகு உடலும் மனமும் செயல்படும் வகை இது. 30 மைல் நடந்து ஓர் இடத்தை அடைந்தபின் கால் கெஞ்சும். ஆயாசமாக உட்கார்ந்தபொழுது நாம் பார்க்க வந்தவர் வேறு இடத்திலிருக்கிறார், அது இங்கிருந்து அரை கிலோ மீட்டர் இருக்கும் என்றால், 30 மைல் நடந்தது சிரமமாகத் தோன்றாது. இந்தச் சிறிய தூரம் மலைப்பாகத் தோன்றும். உடல் உட்கார்ந்த இடத்தை விட்டு நகராது. 4 முறை பெயிலானவன் ஐந்தாம் முறை பரீட்சைக்குப் படிக்க, 52 வரன் மறுத்துவிட்ட பின் 53வது வரனைப் பார்க்க தயார் செய்ய, போன எலக்ஷனில் 36 ஓட்டு வாங்கியவர் அடுத்த எலக்ஷனில் நிற்க முயலும்பொழுது உடலும், மனமும் துவண்டு நிற்கும்.

உடல் சக்தியைத் திருவுருமாற்றத்திற்காக ஏற்கும்பொழுது கடல் போலிருக்கும். அகண்ட ஜீவநதியைக் கடல் சலனமின்றி விழுங்குகிறது. NGO வாகப் பணம் சம்பாதித்து 5 ஸ்டார் ஹோட்டல் பில் கொடுக்க சில நாள் இசைந்தாலும், மாதத்து வருமானம் மணிக்கணக்கில் செலவானதைப் பார்த்துப் பொறுத்துக்கொள்ள முடியாது.

உடல் பிரபஞ்சம் முழுவதும் பரவி நிற்பதால், நாம் கொடுக்கும் சக்தி பிரபஞ்சத்தை நிரப்பிய பின்னரே தெளிவடையும் என்பதால், நாம் மனத்தால் உற்பத்தி செய்யும் சக்தி மேல் மனத்தில் எழுவதால், பிரவாகமாக நாம் காண்பது உடலை அடைந்தவுடன் சிறு துளியாகிறது. அதைக் கண்டபின் மனம் சலித்து, சோர்வடையும். அன்னை 13,000 பக்கங்களில் தாம் பெற்ற யோகானுபவத்தில் உடலின் விந்தைகளை விளக்கமாக, விபரமாக எழுதியிருக்கிறார். உடலின் பெருமைகளைப் புகழ்மாலையாக உடலுக்குச் சூட்டியுள்ளார்.

**உடல் பொறுமையே உருவானது,**
**எதையும் கேட்காதது,**
**எதையும் கேட்க விரும்பாதது,**
**வேலை செய்வதற்கு மட்டும் இசைவது,**
**தன்னை வலியுறுத்தாதது,**

என்று உடலையும், குறிப்பாக தம்முடலையும் அன்னை குறிக்கின்றார். மனம் இதற்கு மாறானது. வீம்பாகப் பேசும், மறுத்துப் பேசும், செயல்படும் எதையும் சந்தேகப்படும், எதையும் கேள்வியுடன் எடுத்துக் கொள்ளும். உடலுக்குரிய இசைவு (docile submission) மனத்திற்கில்லை என்கிறார் அன்னை.

*தொடரும்.....*

***

ஜீவிய மணி

விஞ்ஞானம் என்பது ஒரு சிறிய சக்தி **(inferior power).**



# இம்மாதச் செய்தி

**அனைத்தும் பரமனுடன் அவள் புரியும் லீலைகளே; காலத்தைக் கடந்த புதிர்களை அவள் வெளிப்படுத்துபவையே எல்லாம்; அவை அனந்தத்தின் அற்புதங்களாகும். அனைத்தும் அவளே; சித் - சக்தியின் பகுதிகளாகும். அவள் நினைத்து, பரமன் அனுமதித்து நடப்பவை தவிர எதுவும் எங்கும் இல்லை. பரமனின் உந்துதலால் அவள் கண்டு, களித்துத் தன் ஆனந்த ஊற்றில் உருவாக்கியவை தவிர மற்ற எதுவும் உருவம் பெறுவதில்லை.**

***

# லைப் டிவைன்

கர்மயோகி

## IX.The Pure Existent

**We cannot think out the Absolute.** *P. No. 78*
**Nor can we describe it.** *Para No.14*
**It is not our business.**
**Therefore we must accept the double fact.**
**We must accept stability and movement; unity and multitude.**
**We thus accept Shiva as well as Kali.**
**We must know Time in terms of Timelessness.**
**We must know Space in terms of Spacelessness.**
**The Existence is Timeless and Spaceless.**
**The Existence is one and stable.**
**Measure and measurelessness are inapplicable to Existence.**
**Pure Reason described pure Existence, Sat.**
**Intuition and experience also did so.**
**What do they have to say about Force, Movement, Shakti?**

**We have a first question to ask.** *P. No. 79*
**Whether Force is simply a force?** *Para No. 15*
**Is it simple, unintelligent energy of movement?**
**A consciousness emerges out of it.**
**It does so in our own material world.**
**Is that consciousness a phenomenal result?**



## 9. சத் புருஷன்

**பிரம்மத்தை மனதால் சிந்திக்க முடியாது.**
**அதை விவரிப்பதும் இயலாத காரியம்.**
**அது நம் கடமையில்லை.**
**எனவே இரண்டு உண்மைகளையும் நாம் ஏற்க வேண்டும்.**
**சலனம், சலனமற்ற நிலை, ஐக்கியம், பல ஆகிய நான்கையும் நாம் ஏற்க வேண்டும்.**
**சிவனையும், காளியையும் ஏற்க வேண்டும்.**
**காலத்தை, அதைக் கடந்த நிலையால் அறிய வேண்டும்.**
**இடத்தை, அதைக் கடந்த நிலையால் அறிய வேண்டும்.**
**சத் புருஷன் காலத்தையும், இடத்தையும் கடந்தவன்.**
**சத் புருஷன் ஒன்று, நிலையானது.**
**சத் புருஷன் அளவுக்குட்பட்டவனில்லை.**
**சத் புருஷனைப் பகுத்தறிவு விவரிக்கிறது.**
**ஞானமும், அனுபவமும் விவரிக்கின்றன.**
**சலனம், சக்தியைப் பற்றி அவை என்ன கூறுகின்றன?**

**நாம் கேட்க வேண்டிய முதற்கேள்வி ஒன்றுண்டு.**
**சக்தி என்பது அசைவைத் தரும் சக்தியா?**
**எளிய, அறிவற்ற சக்தி அசைவைத் தருகிறதா?**
**அதிலிருந்து ஜீவியம் எழுகிறது.**
**நாம் வாழும் ஜடஉலகில் ஜீவியம் எழுகிறது.**
**அந்த ஜீவியம் நாமறிந்த நிகழ்ச்சிகளின்பாற்பட்டதா?**

**Or is it its own true secret nature?**

**Vedanta says Force is simply Prakriti.**

**Prakriti is only a movement of action and process.**

**Is Prakriti really a power of Chit?**

**Does Chit have a nature of creative self-conscience?**

**All the rest hinges on this essential problem.**

***The end** of Chapter IX*

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

**Life Divine** நூலில் மேலே போகப் போக கருத்தின் கம்பீரத்தை பகவான் உயர்த்துகிறார். ஆரம்பத்தில் பகுத்தறிவுக்கு விளக்கம் அளிக்கிறார். அடுத்தாற்போல் அறிவு ஞானமாவதைக் காட்டுகிறார். பின் பகுதியில் பரம்பொருளை விளக்குகிறார். அறிவு பரம்பொருளை எட்ட முடியாது. போகப் போக நூல் கருத்தின் நிலையை உயர்த்துவதால் வாசகரும் தம் அறிவு நிலையை உயர்த்த வேண்டும். இல்லை எனில் நூல் விளங்காது.

*கருவியை உயர்த்தும் கருத்து.*



**அல்லது பிரகிருதியின் இரகஸ்யம் ஜீவியத்தில் வெளிப்படுகிறதா?**

**பிரகிருதியை சக்தி என வேதாந்தம் கூறுகிறது.**

**பிரகிருதி செயலின் அசைவு.**

**பிரகிருதி சித்தினுடைய சக்தியா?**

**சித்திற்குத் தன்னையறியும் சிருஷ்டித்திறனுண்டா?**

**இதற்கு வரும் பதிலைப் பொருத்ததே மற்ற அனைத்தும்.**

*9-ம் அத்தியாயம் முற்றும்*

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

எல்லாச் செயல்களிலும், அசைவுகளிலும் வாழ்வின் எதிரொலியைப் பார்க்கலாம். வேலைக்குரிய நேரம், நிகழ்ச்சிகள் தொடர், அவற்றுள் ஒவ்வொன்றும் பூர்த்தியாவது, சக்தி திறன், பலன், செயல் நடக்கும் நிலைகள், தேவைப்படும் இடம், உணர்வு, சூட்சுமங்கள், சூழல், அதற்குரிய அறிவு, காலத்தின் தேவையைப் பூர்த்தி செய்யும் திறன் ஆகியவற்றில் எதிரொலியைக் காணலாம். காரியத்தை ஆரம்பிக்க தேவைப்படும் நேரம் நிபந்தனைகளை நிர்ணயிக்கும்.

# "என் வீடு"

நான் நெடுநாளாக அன்னையை வழிபடுகிறேன். வீட்டைச் சுத்தம் செய்தால் கணவருக்குப் பிடிக்கவில்லை, பிள்ளைகள் மறுத்துப் பேசுகிறார்கள் என்பதால் சுத்தம் செய்ய முடிவதில்லை. சாதாரண மனிதர்கள் வீடுபோல குப்பையும், கூளமுமாக மலிந்து கிடக்கிறது. எவருக்கும் தெரியாமல் தியானம் செய்ய வேண்டும், இல்லாவிட்டால் கேலி செய்வார்கள். அல்லது குடும்பம் நடத்தும் வீட்டில் தியானம் எதற்கு என்பார்கள். அன்னைக்குகந்ததுபோல் சடங்குகளிலிருந்து விலகலாம் எனில் நாம் குடும்பம் செய்கிறோம், ஊரில் குடியிருக்கிறோம், காட்டிலில்லை எனக் காட்டுக் கத்தலாகக் குரல் கேட்கும். அதனால் சடங்குகளை விடமுடியவில்லை. யாராவது போனில் வீட்டில் ஒருவரைக் கூப்பிட்டால், நான் போனில் பேசும்பொழுது அவரைக் கூப்பிடுகிறேன் என்றால் வீட்டில் விபரீதம் நடக்கும். இந்த அநியாயமுண்டா? வீட்டு மனிதர்களே துரோகம் செய்தால் எப்படிக் குடும்பம் உருப்படும்? கூப்பிட்டால் இல்லை என்று சொல்லாமல் என்னைக் காட்டிக் கொடுப்பவரைத் தாயார் என எப்படி நான் சொல்வது என்று என் பெரிய மகன் திட்டுவான். பதில் சொல்ல முடியாமல் தவிப்பேன். இருந்தாலும் நான் பொய் சொல்வதில்லை. உடைந்த பொருட்களை ரிப்பேர் செய்ய எவருக்கும் தோன்றாது. தெருவில் வருபவர்களைக் கொண்டு முடிந்தவரை யாரும் வீட்டிலில்லாதபோது ரிப்பேர் செய்வேன். அதனால்,

- வீடு களேபரமாக, குப்பையாக இருக்கிறது.
- வாய் நிறைய எல்லோரும் பொய் சொல்கிறார்கள், நானும் பொய் சொல்லவில்லை என மட்டமாகத் திட்டுகிறார்கள்.
- ஒரு மகள் எப்படி எல்லோரையும் ஏமாற்றினேன் என்று பெருமைப்படுகிறாள்.



அன்னை பக்தர்கள் வீட்டுக்கு வருவது வீட்டில் எவருக்கும் பிடிக்கவில்லை என்று ஒரு பக்தர் தன் மனம் திறந்து தன் நெடுநாளைய நண்பரிடம் சொல்லியபொழுது, அவர் தம் அபிப்பிராயத்தைக் கூறினார். எனக்கு 12 ஆண்டுகட்கு முன் தெரிந்த நண்பராக நீங்கள் இல்லை, உங்கள் முகம் பிரகாசமாகவும், மனம் அமைதியாகவுமிருக்கிறது. உங்கள் வேலையில் 3, 4 உயர்வு வந்துள்ளது. செல்வம் அளவு கடந்து பெருகியுள்ளது. அன்னை குறைவில்லாமல் உங்கள் வாழ்வில் செயல்பட்டுள்ளார்கள் என்று கூறியபொழுது பக்தர் மீண்டும் அவரைக் கேட்டார்,

"அன்னை நான் சரியேயில்லாதபொழுது முழுவதும் சரியாக இருப்பதுபோல் அருள் பாலித்துள்ளார்கள்,

"நான் அன்னைக்குச் சரியாக நடந்துகொள்ள வேண்டாமா?"

நண்பர் பதிலாக,

"நீங்கள் உங்கள் வீட்டினருக்குச் சரியாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறீர்கள். அது தேவையில்லை. அன்னைக்குச் சரியாக இருந்தால் அனைத்துக்கும் சரியாக இருந்ததாக அர்த்தம்" என்றார்.

❈ ❈ ❈

### ஸ்ரீ அரவிந்த சுடர்

மனித உறவுகள் பல. அவற்றுள் அன்பு ஒன்று. ஓர் ஆன்மாவின் தொடர்பு அடுத்த ஆன்மாவுடன் இருந்தால் அஃது அன்பான தொடர்பாகும்.

*அன்பு ஆன்மாவின் ஸ்பர்சம்.*

## “ஜப்பானியர் பண்பு”

‘Evening Talks’ மாலைநேர உரையாடல்கள் என்ற நூலில் பகவான் ஒரு சமயம் ஜப்பானியர்களைப் பற்றிப் பேசுகிறார். அவர் கூறுபவை.

- ஜப்பானியர்கள் நாகரீகமானவர்கள்.
- தங்கள் சொந்த வாழ்வைப் பிறரிடம் பகிர்ந்து கொள்ளமாட்டார்கள்.
- அளவு கடந்த சுயக்கட்டுப்பாடுள்ளவர்கள்.
- கோபப்படுவதோ, சண்டையிடுவதோ அவர்கள் அறியாதன.
- தங்கள் மானம் பாதிக்கப்பட்டால் கொலையும் செய்வார்கள். பிறரைக் கொலை செய்யமாட்டார்கள், தங்களையே கொன்று கொள்வார்கள்.
- ஒரு ஜப்பானியர் ஆங்கிலேயர் வீட்டின் முன் தற்கொலை செய்து கொண்டால், அதன் பிறகு அவ்வாங்கிலேயர் அவ்வீட்டில் குடியிருக்கமுடியாது.
- குற்றம் செய்பவனுக்கும் வினோதமான மான உணர்வுண்டு.
- வீட்டிற்குத் திருடன் வந்து பணத்தை எடுத்தால் வீட்டுக்காரர் தம் செலவுக்குப் பணம் வேண்டுமென்றால் ஓரளவு பணத்தைத் திருடன் வைத்து விட்டுப் போவான்.
- கடன் தர வேண்டுமெனத் திருடனிடம் சொன்னால் எல்லாப் பணத்தையும் வைத்துவிட்டுப்போவான்.



- இங்கிலாந்திலோ, அமெரிக்காவிலோ என்ன நடக்கும் என நினைத்துப் பாருங்கள்.
- எதிரியிடமும் பரிதாபம் கொள்ளும் குணம் ஜப்பானியரிடம் அதிகம்.
- ஜப்பான் ரஷியாவைத் தோற்கடித்தபொழுது ஜப்பானிய அரசன் மிக்காடோ ஜார் மன்னனை நினைத்து கண்ணீர் விட்டார்.
- பூகம்பம் வந்தபொழுது 50,000 பேர் நெருப்பில் மாட்டிக்கொண்டனர். எவரும் அபயக் குரல் எழுப்பவில்லை. அனைவரும் அமைதியாக புத்தர் மந்திரத்தை உச்சரித்தனர்.
- ஒரு சாதகர் ‘அப்படிப்பட்ட கட்டுப்பாட்டுக்குட்பட்டவர் யோகத்தில் சிறப்பாக முன்னேறலாம்’ என்றதற்கு ஸ்ரீ அரவிந்தர் ‘யோகத்திற்கு அது போதாது’ என்றார்.
- அப்படிப்பட்ட உயர்ந்த பண்புகள் இன்று மேல் நாட்டுத் தொடர்பால் பாழாகிறது என்று பகவான் கூறினார்.
- இவ்வளவு உயர்ந்தவர்கள் இன்று வியாபார மனப்பான்மை பெற்றுவிட்டனர்.
- நகஷீமா என்பவரின் தாயார் அமெரிக்காவிலிருந்து ஜப்பான் திரும்பியபொழுது ஜப்பான் மாறிவிட்டதைக் காணப் பொறுக்காமல் அமெரிக்கா திரும்பிவிட்டார்.

❈ ❈ ❈

## அன்பர் கடிதம்

*ஸ்ரீ அன்னையின் அற்புதப் பேரருள்*

ஸ்ரீ அன்னையின் அற்புதச் செயல்கள் அன்றாட நிகழ்ச்சிகளாக நடைபெறுகின்றன. ஸ்ரீ அன்னையின் அருட்செயல்கள் என் வாழ்க்கையில் சில நிகழ்ந்திருந்தாலும், இன்று நிகழ்ந்தது மெய்சிலிர்க்கச் செய்கின்றது. இதுபோன்ற அற்புதங்களை அன்றாடம் நிகழ்த்தும் ஸ்ரீ அரவிந்த மாதாவிற்கு நன்றி நவிலக் கடமைப்பட்டுள்ளேன். இதை ஸ்ரீ அன்னை அன்பர்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

என் மனைவி சந்தானலக்ஷ்மியுடன், 8 மாதப் பேரக்குழந்தை அரவிந்த பிரணவ ஸ்ரீ ஹரியை, அமெரிக்காவிலுள்ள Fort Worth இல் உள்ள என் மகன், மருமகளிடம் சேர்ப்பிக்க, அக்டோபர் 29ஆந்தேதி British Airways விமானத்தில் சென்னையிலிருந்து காலை 8 மணிக்குப் புறப்பட்டோம். ஒரே நேரத்தில் 22 மணி நேரம் பிரயாணம் செய்ய 8 மாதக் குழந்தையாலும், 73 வயதான என்னாலும் முடியாது என்று லண்டன் சென்று அங்கு ஓர் இரவு என் சகோதரி ஆண்டாள், என் மைத்துனர் Dr. சுதா அவர்கள் வீட்டில் தங்கிவிட்டு, மறுநாள் காலை டல்லஸ்(Dallas) செல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதன்படி, அக்டோபர் 30ஆந் தேதி காலை 7 மணிக்கு லண்டன் Gatwick Airportற்குப் புறப்பட்டோம். Plane புறப்படும் நேரம் 9.45 காலை. சாதாரணமாக ஒன்று அல்லது ஒன்றரை மணி நேரத்தில் செல்லக்கூடிய தூரம். ஆனால் நாங்கள் போக்குவரத்து நெரிசலில் சிக்கிக் கொண்டதால் காலை 11.30 வரை airport செல்ல முடியவில்லை. 4.30 மணி நேரம் தாமதமாகிவிட்டதால் plane புறப்பட்டுப் போயிருக்கும் என்று எண்ணினோம். ஸ்ரீ அன்னையிடம் உள்ளம் உருகிக் கண்ணீர்விட்டு வேண்டிக் கொண்டே இருந்தோம். வழி தோன்றவில்லை.



சென்னை British High Commission, Librarian ஆக 23 ஆண்டுகள் பணிபுரிந்த நான், பிரிட்டிஷ் விதி முறைகளோ, செயல்பாடுகளோ எந்தக் காரணத்துக்காகவும், யாருக்காகவும் தளர்த்தப்படமாட்டா என்பதை உணர்ந்த நான் அன்று flightஐப் பிடிக்க முடியாது என்று தீர்மானித்துவிட்டேன். இருந்தாலும் அன்னையின் மீது நம்பிக்கையும், பாரமும் போட்டு நமது கடமையைச் செய்ய வேண்டுமல்லவா. என் சகோதரி எங்களை Airport trainஇல் அழைத்துச் சென்று, Airportஇல் டிக்கெட்டுக்களைக் கொடுத்தார். அந்தப் பெண் அதிகாரி நொடிப் பொழுதில் 3 - 4 போன்களைச் செய்துவிட்டு எங்களை ஓட்டமும் நடையுமாக Airhostessஇடம் ஒப்படைத்தார். என்னால் நம்ப முடியவில்லை. 4 மணி நேரம் தாமதமாக இப்படி ஓர் அற்புதம் நடைபெறுமென்று. Aircraft 10 நிமிடங்களில் கிளம்பியது. ஸ்ரீ அன்னைக்கு நன்றி கூறி, அந்தப் பெண் அதிகாரி ரூபத்தில் அன்னைதான் வந்தார் என்று சாஷ்டாங்க நமஸ்காரம் செய்ய நினைத்தேன். ஆனால் ஒரு கையில் குழந்தை, மறு கையில் லக்கேஜ், சுற்றி ஜன நெரிசலில் உளமாற அந்தப் பெண் அதிகாரிக்கு நன்றி சொல்லுமுன், அந்த அம்மையார், இது தான் பிரிட்டிஷ் சம்பிரதாயம் என்று கூறாமல் கூறி மறைந்துவிட்டார். அவசரத்தில் எங்களுக்கு உதவிய அந்த மாது சிரோன்மணி பலர் ஸ்ரீ அன்னை அருளால் தோன்றி நமது பாரத நாட்டின் மக்கள் சேவைக்கு அர்ப்பணிப்பாராக என்று வேண்டி நின்றேன். பிரிட்டிஷ் நெறிமுறைகளுக்குப் பழக்கப்பட்ட நான் இத்தகைய அற்புத நிகழ்ச்சியை, ஸ்ரீ அன்னை ஒருவரே நிகழ்த்தவல்லவர் என்பதை உணர்ந்தேன்.

ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ அன்னையின் அளப்பரிய சக்தியை உலகம் உணர்ந்து, ஏற்று உயர்வடைய, மக்கள் உய்ய வழி வகுத்தார் என்றால் மிகையாகாது. மக்கள் மதங்களின் பிடியிலிருந்து விடுபட்டு ஸ்ரீ அன்னையின் ஆன்மிக யுகத்தில், எளிய சீரிய வழிமுறைகளைக் கடைப்பிடித்து ஒழுகலாயினர். ஜாதி சமயமற்ற சமுதாயம் உருவாக அருட்பிரகாச வள்ளலார் பாடுபட்டார். அது நடைமுறையில்

அன்னையின் வாழ்நாளில் ஒருமைப்பாட்டு முறையாக அமைய வழியேற்பட்டது. இந்தத் தொண்டு கிராமங்கள்தோறும், நகரங்கள் தோறும், நாடு முழுவதும் அன்னையின் இயக்கம் பரவிட வேண்டும். ஊர்கள்தோறும் தியான மையங்களும், தியானக் கூடங்களும் பெருக வேண்டும்.

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னையின் ஆன்மிக சகாப்தத்தில் மக்கள் எழுச்சியும் வளர்ச்சியும் பெற்று எளிய, தூய்மையான வேறுபாடற்ற சமுதாயம் உருவாக, ஊரும், நகரும், நாடும், உலகும் உய்ய ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை இவர்களின் எளிய வழிமுறைகள் அமைவதாக.

ஓம் நமோ பகவதே ஸ்ரீ அரவிந்தாய நம!

❋ ❋ ❋





## P.12. Error is the handmaid of Truth

## தவறு, குறை என்பவை சத்தியத்தை உருவாக்கும் கருவிகள்

தவறே வாராமல் ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமானால் ஏற்கனவே நாம் அறிந்த காரியங்களை மட்டுமே அதுபோல் செய்யமுடியும். புதியதாக இன்று கம்ப்யூட்டர் வந்துள்ளது. இதன் புது அம்சங்களைத் தவறில்லாமல் கண்டுபிடிக்க வேண்டும் எனில் முடியாது. 27 பல்கலைக் கழகங்கள் இருந்த நம் நாட்டில் 220 உற்பத்தி செய்யும்பொழுது தரம் குறையக் கூடாது எனில் விரிவுபடுத்த முடியாது. தரம் குறையக்கூடாது எனில் அபிவிருத்தியில்லை. புதிய ஸ்தாபனங்களில் பழைய ஸ்தாபன ஜூனியர்கள் தலைவர்களாக வருவதால் தரம் அவசியம் குறையும். மாணவர்கள் 50 ஆண்டு முன்பு சமூகத்தின் மேல் நிலையிலுள்ள குடும்பத்திலிருந்து வந்தார்கள். இன்று லட்சியமே அடி மட்டத்திலுள்ளவரை படிக்க வைப்பது. மாணவர்களும், பேராசிரியர்களும், துணை வேந்தர்களும் தரம் குறைந்தால் படிப்பின் தரம் குறையும்.

- இன்று நாட்டில் கல்வித் தரம் குறைவது கல்வி அபிவிருத்திக்கு நாடு இட்ட முதல்.
- குறையில்லாமல் முன்னேற்றமில்லை.

ஐரோப்பா நாகரீகத்தின் சின்னமாக இருந்து நாட்டை அரசர்கள் ஆண்டபொழுது Log cabin சிறு குடிசையில் பிறந்த படிக்காத லிங்கன் தாமே முன்னேறி வந்து நாட்டில் பிரசிடெண்ட் பதவி ஏற்றார். 1 ஏக்கர் காட்டைத் திருத்தி பயிரிடும் நிலமாக மாற்ற சராசரியாக 3 பேர் இறந்தனர் எனில் நாகரீகம் எப்படிப்பட்டது எனத் தெரிகிறது. அந்தக் குறை இன்று அமெரிக்காவின் நிறைவு.

இன்று இங்கிலாந்தில் படித்தவர் எவரும் பொய் சொல்வதில்லை என்பது அன்று இந்தியாவில் பொய் சொல்பவரில்லை என ஒரு வெளிநாட்டு யாத்திரீகன் தன் குறிப்பேட்டில் எழுதியது போலிருக்கிறது. இதே இங்கிலாந்தில் கொஞ்ச நாள் முன் (Chancellor & Exchequer) என்பவரை ஊழலுக்காகக் கைது செய்ய உத்தரவிட்டனர். நம் நாட்டில் மத்திய பொருளாதார மந்திரி (Finance Minister) போன்றவர். அவர் நேரே அரசனிடம் போய் முறையிட்டார். சில நூற்றாண்டுகட்கு முன் நடந்த செய்தியிது. எதிர்ப்புத் தெரிவிக்காமல் Towerக்கு - ஜெயிலுக்கு - போவதே நல்லது என்றான் அரசன். அந்த அரசனே அதிகபட்ச இலஞ்சம் பெற்றவன். அந்தப் பெருங்குறை இன்று நாட்டில் பொய் சொல்பவர்களைக் காண முடியவில்லை, கோர்ட்டில் எவரும் பொய் சொல்வதில்லை, பொய் சொல்லும் கட்சிக்காரனுக்கு கேஸ் நடத்த வக்கீல் கிடைக்கமாட்டார் என்ற நிலை.

குறை, தவறு என்பதால் புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்ட பொருள்கள் ஏராளம்.

1. பேப்பர் செய்யும்பொழுது குறை ஏற்பட்டது. அதனால் இங்க் ஊறியது, அப்படி ஏற்பட்டதே blotting paper.

2. கோந்து செய்யும்பொழுது கோந்து சரியாக ஒட்டவில்லை. அதைப் பயன்படுத்தி Post It என்றதை செய்தனர். சிறு குறிப்பெழுதி இதில் ஒட்டினால் ஒட்டிக்கொள்ளும். எடுத்தால் வரும். இது ஆபீஸில் பெரிய உபயோகமானது.

3. பென்சிலின் அப்படிக் கண்டுபிடிக்கப்பட்டதே.

❊ ❊ ❊



**Agenda**

**Vol I P. 69** **Three images of total Self-giving to the Divine:**
**May your will be done, not mine – prostration**
**As you will, as you will – open from head to foot**
**I am yours for eternity – to nestle in His arms.**

**அர்ப்பணத்திற்குரிய ஆன்மிக உருவகங்கள் மூன்று**

**அன்னை விருப்பம் நிறைவேறட்டும், என்னுடையது அல்ல – சாஷ்டாங்க நமஸ்காரம்.**

**திருவுள்ளம் பலிக்கட்டும், திருவுள்ளமே பலிக்கட்டும் – தலை முதல் கால்வரை ஜீவன் மலர்வது.**

**ஏழேழ் பிறவிக்கும் உனக்கேயுடையவன் – தெய்வீகக் கரங்களில் குழந்தையாய் தவழ்வது.**

உரைநடையைவிடக் காவியம் மனத்தைத் தொடும். ஒரு மந்திரத்தை உச்சரிப்பதைவிட அதை ஓர் உருவமாக்கினால் அதற்கு மனோ சக்தியுண்டு. அகந்தை அழிய அன்னை 3 மந்திரங்களையும், அவற்றிற்குரிய உருவகங்களையும் மேலே கூறுகிறார்.

சாதாரண மனிதனுக்கு உறுதியிருப்பதில்லை, சிறப்பானவர்க்கே மன உறுதியுண்டு. அது போன்ற சிறப்பான மன உறுதி மனிதன் முழுவதையும் பிரதிபலித்தால், அவ்வுறுதி மனிதனுடைய முழுப் பிரதிநிதி, அகந்தையின் பிரதிநிதி. அவன் இறைவனுக்கு சரணடைய உதவும் மந்திரம்,

**அன்னை விருப்பம் நிறைவேறட்டும் என்பது.**

மந்திரம் சக்தி வாய்ந்தது. செயல்படும் பலன் தரும். ஆனால் மனித சுபாவம் அதனினும் வலுவுடையது. அதனால் மனிதனே “என்னுடைய விருப்பம் நிறைவேற வேண்டாம்” என்று கூறுவது அன்னை

விருப்பம் நிறைவேற உதவும். இவற்றிற்குத் துணையாக மனதால் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்வதாய் கற்பனை செய்ய வேண்டும் என்கிறார் அன்னை.

## உருவகத்தின் சக்தி

- எதிரிக்கும் நமக்கும் இடையே அன்னையை நிறுத்துவது.
- வலிக்கும் இடத்தை அன்னை வருடிக் கொடுப்பதாக நினைப்பது,

போன்ற பல உருவகங்களை அன்னை கூறியுள்ளார். மந்திரம் சொல்லுடைய சக்தி, உருவகம். கற்பனையின் சக்தி imagination, கற்பனை சொல்லைவிட சக்தி வாய்ந்தது. பேரிலக்கியங்கள் கற்பனையில் உருவானவை.

நம் மனம் குறுக்கிடும். குறுக்கிடாமலிருப்பது அடுத்த உயர்ந்த கட்டம். குறுக்கிடாமலிருக்க receptivity அன்னையை ஏற்கும் திறன் அதிகமாக இருக்கவேண்டும். 'திருவுள்ளம் பலிக்கட்டும்' எனத் திரும்பத் திரும்பச் சொல்வது அடுத்த முறை. இதற்குரிய உருவகம் நம் தலை முதல் கால்வரை இரண்டாகப் பிரிவதுபோல் நினைப்பது. ஜீவன் தன்னைத் திறந்து அருளைப் பெறுவதைக் குறிக்கும்.

எனக்கு என்று ஓர் உறுதி (will) இல்லை என்பவன் இறைவனின் திருவுள்ளத்தை நாடுகிறான். அடுத்த கட்டத்தில் உறுதி, ஞானம் ஆகியவற்றைக் கடந்து ஜீவன் முழுவதையும் சமர்ப்பணம் செய்யும் நிலை. நான் முழுமையாக உனக்குரியவன் என்பது அடுத்த மந்திரம். அதற்குரிய உருவகம் குழந்தையாய் அன்னையின் குவிந்த கைகளில் தவழுவதாகும். முறையாகச் செய்தால் இவை பலன் தரும் என்கிறார் அன்னை. முறை என்பது மந்திரத்தை உச்சரிக்கும் முன் ஜீவனின் ஆழத்தைத் தொடுவது, அர்ப்பணத்தை ஜீவன் முழுவதையும் தழுவச் செய்வது.

❊ ❊ ❊





## P. 15. Even his godlike strength to rise must fall

### தெய்வ வலிமையும் பாய்வதற்கு பதுங்க வேண்டும்

இயற்கையின் முரண்பாடு, இறைவனுக்கு உடன்பாடு. இதயத்தின் பிணக்கு சிந்தனைக்கு அழைப்பு என்ற கருத்துகள் Life Divine முதல் அத்தியாயத்திற்குரியவை. ஸ்ரீ அரவிந்தத்தைச் சுருக்கமாகச் சொல்ல முடியும். நாம் வாழும் உலகம் சிருஷ்டி எனப்படும். இது காலத்தில் செயல்படுவது - Becoming என்பது. மேல் உலகம் காலத்தைக் கடந்தது. சிருஷ்டியில் வாழ்பவன் மனிதன். சிருஷ்டியைக் கடந்த நிலை காலத்தைக் கடந்த நிலை. அங்கு உறைவது புருஷன், Being. இதுவரை யோகம் என்பது உலகத்தைவிட்டு மோட்சத்திற்குப் போவது. From Becoming to Being. ஸ்ரீ அரவிந்தம் சிருஷ்டியைப் பகுதியாகவும், புருஷனைப் பகுதியாகவும் காண்கிறது. சிருஷ்டியும், புருஷனும் சேர்ந்தது முழுமை. அந்த முழுமையின் மையம் சிருஷ்டியில் உள்ள புருஷனில் (Being of the Becoming) உள்ளது. அதுவே சைத்தியப் புருஷன். மேற்சொன்ன வரி தெய்வமும் பகுதி, பாய்வதற்குப் பதுங்கவேண்டும் என்கிறது. முழுமைக்கு அது தேவையில்லை. பிரம்மமில்லாமல் எதுவுமில்லை, சர்வம் பிரம்மம்.




சிருஷ்டிக்கும் வித்து பிரம்மம். அப்பிரம்மம் முழுமையானது. மனிதன் புருஷனைத் தேடுவதற்குப் பதிலாக, சிருஷ்டியிலுள்ள புருஷனை - சைத்தியப் புருஷனைத் - தேடினால் வாழ்வு தெய்வீக வாழ்வாகும். யோக வாழ்வில் ஆரம்பித்துத் தெய்வீக வாழ்வில் பூரணயோகம் முடிகிறது. நம் வாழ்வும், தெய்வத்தின் வாழ்வும் பகுதி என்பதே ஸ்ரீ அரவிந்தம்.

இந்தப் பக்கத்திலுள்ள இதர கருத்துகள்:

- ஆன்மா அதன் ஆதியை தனியே சென்றடையும்.
- பிரம்மாண்டமான சக்தி பின்னே போய் நின்றது.
- அணுவில் உறையும் அனந்தனின் தழல்.
- எல்லாம்வல்ல சூட்சுமக் குரு.
- இரண்டு இரட்டைகள் உருண்டு தேறிய ஒருமை.
- உருண்டு வந்த உச்சியைத் தாண்டும் குதிப்பு.
- உயர்ந்த நிலைக்குரிய உன்னத நிதானம்.
- புவியும் சுவர்க்கமும் ஆடும் ஊசல்.
- வளர்பிறைபோல் வளரும் ஆன்ம வளம்.
- பின்னத்தின் முழுமை பின்னணியில் தெரியும் ஆத்மா.
- பிரம்மத்தையும் பிண்டத்தையும் இணைக்கும் சந்திப்பு.
- அனைவர் முகத்திலும் பொலியும் அவனுருவம்.
- காலத்தினுள் காலத்தைக் கடந்த கல்பம்.
- ஊனக் கண்ணுக்கு உயிரும் உயர்வும் தரும் உன்னதம்.
- கர்மத்தின் வலிமையும் அருளின் சக்தியும் இணையும் இடம்.

❋ ❋ ❋



**"அன்பர் உரை"**

## அன்னையின் சக்தி கன்ஸர்வேட்டிவாக செயல்படாமல், கிரியேட்டிவாக, முன்னேற்றமாகச் செயல்படும்

(சென்னை - மாம்பலம் - தியான மையத்தில், ஜனவரி 4, 2001இல், திரு. N. அசோகன் நிகழ்த்திய உரை)

கன்சர்வேட்டிவ் என்றால் இருப்பதைக் காப்பது எனவும், கிரியேட்டிவ் எனில் புதியதாகப் படைப்பது எனவும் பொருள். பழையது பவுன் என்பது கொள்கை. முன்னோர் மூதாதையர் அறிவுக் களஞ்சியம். இலக்கியங்கள் இலட்சியமானவை. வேதம் கூறுவது வேதவாக்கு. அவற்றை நாம் அறிவது பெரியது. நம்மால் அவற்றைக் கடந்த நிலையை எட்ட முடியாது. எனவே அவற்றைப் போற்றிக் காப்பாற்ற வேண்டும் என்ற கொள்கையை conservative என்கிறோம். அது நாளடைவில் மாறி அன்றைய தோற்றம் - வேஷ்டி, குடுமி - பெரியது. இன்றைய மாற்றம் தவறு என்றாகிவிட்டது. Creative என்றால் உயர்ந்த நிலையில் காவியம் சிருஷ்டி. அன்றாட நிலைகளிலும் ஆயிரம் நேரங்களில் நாம் creative ஆக இருக்கிறோம். உற்சாகமாக இருப்பதை creative எனவும், தளர்ந்திருப்பதை அங்ஙனமில்லை எனவும் கொள்கிறோம்.

வாழ்வையும், யோகத்தையும், யோக வாழ்வையும் பொருத்த அளவில் இச்சொற்கள் தரும் பொருள்கள் எவை?

- நெடுநாளிருப்பது உயர்வு - creative, conservative.
- நீர்க் குமிழியாய் அழிவது தாழ்வு - சிறியது, மாற வேண்டிய பழைய நிலை.
- ஆன்மீகச் சாரமுள்ளவை காப்பாற்றப்பட வேண்டும். (conserve)
- காலத்திற்குரியவை காலம் மாறும்பொழுது மாறவேண்டும்.
- நித்தியம், அநித்தியம் என்பவை மாறிய நிலைகள்.

- *தோற்றம் மாற வேண்டியது. அதைக் காப்பாற்ற முயலக்கூடாது.*
- *உள்ளுறை விஷயம் நீடிக்க வேண்டும். அதை அழிய விடக் கூடாது.*
- *கல்வி முறை மாறலாம், கல்வி நீடிக்க வேண்டும்.*
- *பேச்சுப் பாணி மாறலாம், பேசும் பண்பு மாறக் கூடாது.*

மெடிகல் காலேஜ், கம்ப்யூட்டர் கோர்ஸ், Ph.D., இலக்கியம், சமூகவியல் என்று பாடங்கள் நாளாவட்டத்தில் முக்கியத்துவம் மாறும். அவை தோற்றம். ஆனால் கல்வி அடிப்படை. கல்வி வேண்டுமா, வேண்டாமா என்று கேள்வியை எழுப்பக்கூடாது. 1967 முதல் உலக சர்க்கார்கள் சத்திய ஜீவிய சக்திக்குட்பட்டுள்ளன என ஸ்ரீ அரவிந்தர் அன்னையிடம் சூட்சும உலகில் சந்தித்துக் கூறினார். இன்று உலகின் பொருளாதார நிலை, பணப்புழக்கம் அன்னை சக்திக்குட்பட்டு அபரிமிதமாகப் பெருகி வருகிறது. அப்படிப் பெருகி வரும் சக்தி ஏற்படுத்தும் மாறுதல்கள் புதிய படைப்பா, பழைய நிலையைக் காப்பாற்றுகின்றனவா எனில்,

**அவ்வளவும் புதியன என அன்னை கூறுகிறார்.**

ஆகர்ஷண சக்தி ஈர்க்கும். மின்சாரம் இயக்கும். அன்னை சக்தி புதியன படைக்கும். இலையும், காயும், மரமும், பட்டையும் மண்ணில் புதைத்தால் உளுத்துப் போகும். விதை முளைக்கும். விதைக்குப் புதியன படைக்கும் திறனுண்டு. சில மரத்துக் கிளைகளும் மண்ணில் புதைக்கப்பட்டால் துளிர்க்கும். புத்துயிர் தரும் திறமை எல்லா (மரத்தின்) பகுதிகட்குமில்லை. விதைக்குண்டு. அதுபோல் அன்னை சக்திக்குள்ள சக்தியின் திறன்கள் எவை?

**நம்முள் அன்னை சக்தி நுழைந்தால், ஏற்கனவே உள்ள திறமைகள், சக்திகள் பெருகும்.**

பொட்டல் நிலம் பயிரிடும் நிலமாக மாற பல ஆண்டுகள் பண்பட வேண்டும். மண் உப்பு கலந்திருந்தால் புல்லும் விளையாது. உப்பு தண்ணீர் பாய்ந்தால் உள்ள பயிரும் அழியும்.



**அன்னை சக்தி பட்ட பின் பொட்டல் மண் முதல் ஆண்டு விளை நிலமாயிற்று. உப்பு மண்ணில், உப்பு நீரில் பயிர் பச்சைப் பசேலென வளர்ந்து தழைத்தது.**

பயந்தவன் வேலை செய்யத் தகுதியற்றவன். பயந்து பயந்து சாவான். வேலை நடக்காது. எங்கும் வேலைக்கு எடுக்கமாட்டார்கள். பயந்தவன் பக்தனானான். பயம் பிடுங்கித் தின்றது. அன்னையை அழைத்தான். வேலை செய்து பிழைக்க முடியாதவனுக்கு மானேஜர் வேலை வந்தது. பயம் பீதியாயிற்று. அன்னையை இறுகக் கட்டிப் பிடித்துக் கொண்டான். பயத்தை மீறி ஆட்கள் பணிந்தனர். சிறந்த மானேஜர் எனப் பெயர் பெற்றான்.

- **அன்னை சக்தி பயத்தைத் தைரியமாக மாற்றும்.**

படித்தால் புரியாது என்று பெயர் பெற்ற புத்தகம் Life Divine. பக்தன் ஆசிரமம் வந்தவுடன் அவனுக்குக் கிடைத்த உபதேசம் "Life Divine" புரியாது. படிக்கவேண்டாம்." உபதேசத்தை ஏற்றான். மற்ற நூல்களைப் பயின்றான். எந்த வாயில் மூலமும் அன்னை எந்த ஞானத்தையும் தருவார். Life Divine தத்துவம் அனைத்தும் மற்ற நூல்கள் மூலம் பக்தனுக்குக் கிடைத்தன. மேலும் புதிய எண்ணங்கள் மனதில் தோன்றின. வாழ்வில் Life Divineஐ எப்படிப் பயன்படுத்த முடியும் என்றும் தோன்றிற்று. Life Divine கடினமானது என்பது உண்மை என்பதைப் படித்து பக்தன் அறிந்தான். கடினமானாலும் பக்திக்குப் புரியும். அதன்படி மற்ற subjects பாடங்களைப் பயில முடியும் எனவும் தோன்றியது. தோன்றியவை பலன் அளித்தன. அதனடிப்படையில் பல நூல்களைப் பலர் எழுத முடிந்தது. Mother's Force is creative என்பது நடைமுறையில் உண்மை எனக் காண முடிந்தது. அன்னை சக்தியால் இல்லாத குணங்களை உற்பத்தி செய்ய முடியும். அவற்றுள் ஒன்று,

- *சிறிய உள்ளத்தில் பெரிய மனப்பான்மை எழும்.*
- *இதுவரை வாழ்நாளிலில்லாததுபோல் 1½ வருஷ சம்பளத்தை பிரமேயமில்லாமல் நன்றிக் கடனாக, அன்பளிப்பாக அளிக்க சாதாரண மனித இதயம் எழுகிறது.*

இந்த படைப்புத்திறன் creativity பல வகையானது. உண்மைக்கு அவை பலிக்கும்.

- சொத்து வாங்கினால், பத்திரச் செலவு 13% என்பது சட்டம். அது தவிர்க்க முடியாதது. நாம் வாங்கும் சொத்துக்குக் கிரயச் செலவு செய்த பின் வில்லங்க சிக்கலை அவிழ்க்க மீண்டும் சில ஆண்டுகள் கழித்து வேறு பெயரில் கிரயம் செய்ய வேண்டிவரும்பொழுது, நமக்கு அது விரயமான செயல். சர்க்காருக்குத் தவிர்க்க முடியாத செலவு.

—அந்நிலையில் சட்டம் புதிய உருவத்தில் எழுந்து இருமுறை பத்திரச் செலவைத் தவிர்த்தது. முதல் முறை ரூ. 28,000மும், அடுத்த முறை ரூ. 1,84,000மும் செலவு தவிர்க்கப்பட்டது.

இது ஒரு வகை படைப்புத்திறன்.

- எதிரி மனத்தில் நமக்குச் சாதகமான கருத்து எழுவது ஒரு வகை.
- பக்தன் மீது எழுந்த புகாரை விசாரிக்க ஜட்ஜ் நியமிக்கப்பட்ட பொழுது எப்படி அவரிடம் சிபாரிசு செய்வது என யோசனை செய்யும் நேரம், ஜட்ஜ் பக்தனுடைய கூட்டாளியிடம் வந்து "இது எனக்குப் புதிய விஷயம். பழைய நண்பரென்ற முறையில் உங்களிடம் விவரம் சேகரம் செய்ய வந்துள்ளேன்" என்பது மற்றொரு வகை.
- 20 ஆண்டுகட்கு முன் நம்மை அவமானப்படுத்தியவர் நம்மை அணுகி உதவி கேட்கும் நிலையை ஏற்படுத்தியது ஒரு படைப்பு.
- எதிரி வக்கீல் வாய் மூலமாக நமக்குரிய வாதம் தவறுதலாக எழுவது ஒன்று.
- வாங்கிய பணத்தை ரசீது இல்லை என்பதால் இல்லை என மறுக்கும் பெரிய மனிதர் மறுக்க முடியாத சூழ்நிலையை ஏற்படுத்துவது வேறொன்று.
- பெரியவர் சிறியவரிடம் அதிகப்பிரசங்கித்தனமாகப் பேசிய அடுத்த நிமிஷம் மன்னிப்புக் கேட்பது ஒன்று.



- பக்தரை விஷமமாகக் கேலி செய்த பெரிய மனிதரை, பக்தர் எதிரிலேயே மற்றொருவர் வந்து கேலி செய்வதும் அன்னை சக்தியின் படைப்புத்திறன்.
- பக்தருக்குத் தொந்தரவு செய்த முதன் மந்திரி முதலாண்டில் பதவியை இழந்தது அடுத்த வகை.
- அன்னை கருத்தொன்றை விளக்கி இதனடிப்படையில் கதை எழுதினால் பரிசு கிடைக்கும் என்று கூறியபின் ஒருவர் அதே போல் எழுதியதை உலகத்தில் முதன்மையான Wall Street Journal இப்புத்தகத்திற்கு பரிசு தரவேண்டும் என எழுதுவதும் இவ்வகையைச் சேர்ந்ததாகும்.

அன்னை உலகத்தின் பரிணாம வளர்ச்சியை அடுத்த கட்டமான சத்தியஜீவிய நிலைக்கு உயர்த்துவதற்காக வந்தவர் என்பதை வைத்துப் பார்க்கும்பொழுது, அவருடைய சக்தி எந்த அளவிற்கு ஆக்கபூர்வமாகவும் முன்னேற்றமாகவும் செயல்படக் கூடியதென்பது நமக்கு நன்றாகப் புரியவேண்டும். உலகத்தின் நிலையையே உயர்த்த விரும்புகிறாரென்றால், தனிப்பட்ட முறையில் நம் ஒவ்வொருவருடைய மனநிலையையும் அவர் இம்மாதிரி உயர்த்தவே விரும்புகின்றார் என்றும் நாம் புரிந்துகொள்ளலாம்.

அன்னையின் சக்தி புதிய மாற்றம் முன்னேற்றத்திற்கு உதவக் கூடிய விஷயங்களை ஆதரிக்கிறதென்னும்பொழுது, இத்தகைய முன்னேற்றத்திற்குத் தடையாகவுள்ள பழைய conservative மனநிலை ஏன் அன்னைக்கு ஒத்து வருவதில்லை? அது ஏன் அன்னையின் சக்தி செயல்படுவதற்குத் தடையாகவுள்ளதென்பதை நாம் சற்று ஆராய்ந்து பார்த்தால், மேற்கண்ட தலைப்பு நமக்கு இன்னும் விவரமாகப் புரியும்.

கன்சர்வேடிவ் மனநிலை என்றால் என்ன என்று கேட்டால், இருப்பதைப் போற்றும் மனநிலையாகும். இருப்பதைப் போற்றுகிறோம் என்றால், இருப்பதே சிறந்தது என்று நாம் நினைக்கிறோம் என்றாகிறது. இருப்பதுதான் என்றைக்குமே சிறந்தது, இனிமேல் வருவது இருப்பதற்கு என்றுமே ஈடாகாது என்று நாம்

சொல்வதற்கில்லை. Life is a progressive movement என்னும்பொழுது, இருப்பதைவிட வருவது சிறந்ததாக இருப்பதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. முடியாட்சி போய் மக்களாட்சி வந்துள்ளது. கிராமீய வாழ்க்கையைத் தாண்டி நகர வாழ்க்கை வந்துள்ளது. சாதி ஏற்றத்தாழ்வுகள் போய் ஜனநாயகச் சமத்துவம் வந்துள்ளது. மூடநம்பிக்கைகள் போய் விஞ்ஞானமயமான பகுத்தறிவு வந்துள்ளது. சடங்கு சம்பிரதாயங்கள் நிறைந்த மத ஈடுபாட்டைத் தாண்டி ஆன்மிகம் வந்துள்ளது. இப்படிப்பட்ட முன்னேற்றங்களை எல்லாம் பார்க்கும்பொழுது, இருந்த பழையதை விட வந்துள்ள புதியவை பல மடங்கு சிறந்தவை என்று நமக்கே நன்றாகத் தெரிகிறது. யாருமே இன்று தற்போதுள்ள மக்களாட்சி வேண்டாம், பழைய முடியாட்சிக்கே போவோம், நகர வாழ்க்கை வேண்டாம், பழைய கிராமத்திற்கே போவோம், கார், பஸ் வேண்டாம், பழைய கட்டை வண்டியிலேயே போவோம் என்று சொல்லமாட்டார்கள். அப்படிச் சொன்னாலும் அவர்கள் பேச்சு எடுபடாது. அப்படிப் பேசுபவர்களை மற்றவர்கள் பைத்தியக்காரர்கள் என்றும், மிகவும் பின்தங்கியவர்கள் என்றும் வர்ணிப்பார்கள்.

ஆகவே உலகத்தின் பரிணாம வளர்ச்சியில் பல விஷயங்களுக்குத் தற்காலிக முக்கியத்துவம் தானிருக்கிறது. அவற்றின் காலகட்டம் முடியும்பொழுது அவை தாமாக விலகி அடுத்த கட்டமாக வருகின்ற அவற்றைவிடச் சிறந்த புதிய விஷயங்களுக்கு இடம் கொடுக்க வேண்டும். தாமாக விலகி இடம் கொடுக்காமல் வருகின்ற புதிய விஷயத்தை இருப்பது எதிர்க்கும்பொழுது, அன்னையின் முன்னேற்ற சக்திக்கு இருப்பது எதிராகச் செயல்பட ஆரம்பிக்கிறது. இப்படிப்பட்ட சமயத்தில் அன்னை பழையதின் எதிர்ப்பை மீறி புதியது வெற்றி பெற வழி செய்கிறார்.

உதாரணமாக இந்நாட்டில் ஆயிரம் வருடங்களுக்கு மேலாக சங்கரருடைய அத்துவைதமும் மாயாவாதமும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. ஆன்மிகத்தில் அத்துவைதமும் மாயாவாதமும்தான்



என்றைக்கும் நிலையான உண்மைகள் என்றில்லை. மாயாவாதத்தைத் தாண்டி படைப்பும் தெய்வீகமானதுதான், அதனுள் மறைந்திருக்கும் தெய்வீகத்தை வெளிக்கொண்டு வருவதுதான் பரிணாம வளர்ச்சியின் அடுத்த கட்டம் என்றும், இதற்கு உதவியாகச் செயல்படப் போவது சத்திய ஜீவியமென்றும், பகவானும் அன்னையும் அறிவித்து உலகத்தின் ஆன்மிக முன்னேற்றத்தில் அடுத்த கட்டத்தை நமக்குக் காட்டியுள்ளார்கள்.

இப்படி அவர்கள் நமக்குக் காட்டிவிட்ட பிறகு வந்துள்ள புதிய ஆன்மிகத்தை ஆதரிக்கும் வகையில் நாம் செய்வனவற்றையெல்லாம் அன்னை வரவேற்பார்கள். வந்துள்ள புதியதை ஏற்காமல் பழைய மாயாவாதத்தையே பிடித்துக் கொண்டிருப்பவர்களை அன்னை கருதப் போவதில்லை. புதிய ஆன்மிகத்திற்கு உள்ளுறை விஷயம்தான் முக்கியமே தவிர தோற்றமும் மற்றும் முறைகளும் முக்கியமில்லை. இதனால்தான் பூரண யோகத்தை ஏற்றுக் கொள்பவர்களிடம் அன்னை aspiration, consecration and surrender (இறையார்வம், சமர்ப்பணம், சரணாகதி) என்ற உள்ளுறை விஷயங்களை வலியுறுத்துகிறாரேயொழிய, தியானம், விரதம், யோகாசனம், புஷ்பாஞ்சலி, வழிபாடு போன்ற வெளித்தோற்றங்களுக்கும், முறைகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதில்லை. ஆனால் பழைய ஆன்மிகத்திற்குத் தோற்றமும், முறைகளும் மிகவும் முக்கியம். காவியுடை, ஜபமாலை, தாடி, ஜடாமுடி, கமண்டலம், நிஷ்டை, யோகாசனம், ஸ்தோத்திரம் போன்ற வெளித்தோற்றங்களையும், முறைகளையும் பழைய ஆன்மிகம் மிகவும் வலியுறுத்துவதால், உள்ளிருக்கும் சாரம் போய்விடுகிறது.

தோற்றத்திற்கும் சாரத்திற்கும் வித்தியாசம் தெரியாதவர்கள் தோற்றமிருந்தால் சாரமிருக்கிறதென்று திருப்தி அடைந்து விடுகிறார்கள். தோற்றமில்லாதபொழுது சாரமில்லை என்றும் முடிவு செய்கிறார்கள். சடங்கு சம்பிரதாயங்களில் ஊறிய பல பேர் ஆசிரமத்திற்கு வந்தபொழுது, ‘இந்த இடம் ஒரு ஆசிரமம் மாதிரியே இல்லையே! இங்கே இருப்பவர்கள் யோகம் செய்கிறார்கள் என்று

எப்படி நம்புவது' என்றெல்லாம் பேசியிருக்கிறார்கள். உள்ளுறை விஷயங்களையும் சாரத்தையும் காப்பாற்றிக் கொள்வதுதான் conservative மனப்பான்மையின் நோக்கமென்றால் அது தவறில்லை. ஆனால் நோக்கம் உயர்ந்ததாக இருந்தாலும், நடைமுறையில் சாரத்தைக் காப்பாற்ற முடியாமல் தோற்றத்தைத்தான் காப்பாற்ற முடிகிறதென்றாகிறது. வெறுந்தோற்றத்தைக் காப்பாற்றுவதென்பது வருங்கால முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பதால்தான் அன்னை கன்சர்வேட்டிவ் மனப்பான்மையையும் செயல்பாடுகளையும் ஆதரிப்பதில்லை.

ஆன்மிகமென்பது மனிதனுக்கும் இறைவனுக்குமிடையே உள்ள ஆன்மிக உறவைப் பலப்படுத்துவதற்காக உண்டானது. ஆரம்பத்தில் இந்தப் புனிதமான நோக்கமிருந்தாலும், நாளைடவில் சடங்கு சம்பிரதாயங்களும், வழிபாட்டு முறைகளும் அதிகரித்தன. இதன் விளைவாக உயர்ந்த ஆன்மிகமாகத் துவங்கியது, மதவழிபாடாக மாறி இன்று பூஜை புனஸ்காரங்கள்தான் மிஞ்சி நிற்கின்றன. ஆக ஆன்மிக முன்னேற்றம் என்ற சாரம் போய் மதங்களிடையே இன்று வெற்று வழிபாடு என்ற பழக்கந்தான் நிலைத்து நிற்கிறது.

அன்னை நம்மிடமிருந்து எதிர்பார்ப்பது நாமே இறைவனாக மாறுவதற்கான முயற்சி. ஆனால் மதவழிபாடு என்பது பக்தனை என்றுமே துதிபாடும் பக்திமான் என்ற நிலையிலேயே வைத்திருப்பது. இதனால்தான் அன்னை மதவழிபாடு என்ற பழைய பழக்கத்திலிருந்து விடுபட்டு இறைமயமான சத்தியஜீவிய மனிதனாக மாறுவதற்கு உதவி செய்யும் புதிய ஆன்மிகத்திற்கு நம்மை வரும்படி அழைக்கிறார்.

சாரம் வேறு, தோற்றம் வேறு என்பது ஆன்மிகத்தில் மட்டுமில்லை. வாழ்க்கையிலும் பல துறைகளிலும் நாமிதைக் காணலாம். படிப்பு வேறு, பட்டம் வேறு, கேரக்டர் வேறு, behaviour வேறு. Educational standards உயர்வாக இருந்தபொழுது படித்தவர்களெல்லாம் அறிவாளிகளாக விளங்கினார்கள். ஆனால் இன்று standards எல்லாம் குறைந்துவிட்டன. அதனால் மேலோட்டமாகப் படித்துப் பட்டம் வாங்கியவர்களையெல்லாம் இன்று அறிவாளிகளென்று நாம் முடிவு செய்தால் நம் முடிவு தவறாகவுமிருக்கலாம். படிப்பென்பது உள்ளுறை விஷயம். பட்டமென்பது வெளித்தோற்றம். பட்டமிருந்தால்தான் வேலை கிடைக்கும் என்று degree க்கும் வேலைக்கும் சமூகத்தில் இன்றொரு தொடர்பு வந்துவிட்டதால், அறிவு வளர்ச்சிக்காகப் படிப்பதென்ற நோக்கமே போய், பட்டம் வாங்குவதற்காகப் படிப்பதென்பதாகிவிட்டது. இதனால் படிப்பிலிருந்த depth மற்றும் scholarship என்பவை போய் degree எடுக்குமளவிற்குப் படித்தால் போதுமென்றாகி இன்று படிப்பு மேலோட்டமாகிவிட்டது.

இப்படி படிப்பும் பட்டமும் வேறுவேறாகிவிட்டதால், பட்டத்தின் மேல் மக்களுக்கு வந்துள்ள மோகத்தைக் கண்டிக்கும் வகையிலும் அதே சமயத்தில் சீரியஸான படிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையிலும் அன்னை ஆசிரமத்தில், தாம் நிறுவிய பள்ளியிலும் higher course என்ற college-level உயர்கல்வி ஸ்தாபனத்திலும், certificate மற்றும் degree என்றெதுவும் வழங்குவதில்லை. பட்டத்தை விட்டுவிட்டு உண்மையாக நாம் படிப்பை நாடும்பொழுது நம்மறிவு அபாரமாக வளர்கிறது. நம் கையில் பட்டமில்லாவிட்டாலும் நம்முடைய அறிவு வளர்ச்சி நமக்கு வாழ்க்கையில் நிச்சயம் கைகொடுக்குமென்று அன்னை வழியில் கற்பவர்கள் நம்பலாம்.

இப்படிப் பட்டத்தை விட்டுவிட்டு உண்மையான படிப்பை நாடு என்று அன்னை சொல்வது conservative மனப்பான்மை உள்ளவர்களுக்கு அதிர்ச்சியாகவிருக்கிறது. அவர்களுக்குப் பட்டத்தைக் கைவிட்டால் படிப்பையே கைவிட்டது போன்ற உணர்வு ஏற்படுகிறது. இப்படி, பட்டந்தான் படிப்பென்று நினைப்பவர்களை அன்னை கருதுவதில்லை. பட்டத்தை நாடாமல் ஆசிரமப் பள்ளியில் சேர்ந்து உண்மையாகப் படிப்பை நாடுபவர்களுக்கு அன்னை எல்லாவகைகளிலும் துணை செய்கிறார். அன்னையினுடைய creative சக்திக்கு ஒத்துழைக்கும் வகையில் நாம் செயல்பட

விரும்பினால் உயர்ந்த சாரமுள்ள உள்ளுறை விஷயங்களை நம் வாழ்க்கையில் தக்க வைத்துக் கொள்ளவேண்டும். அதே சமயத்தில் காலவோட்டத்திற்கு ஏற்றாற்போல் வெளித்தோற்றத்திலும் நாம் செயல்படும் முறைகளிலும் வரக்கூடிய மாற்றங்களையும் நாமனுமதிக்க முன்வரவேண்டும்.

| நிலையாக இருக்க வேண்டியவை | | மாறக்கூடியவை |
|---|---|---|
| 1. வேலை செய்வதும் சம்பாதிப்பதும் | - | உத்யோகமும், வேலை செய்யும் பாணியும் (employment or self-enterprise) |
| 2. படிப்பும், கல்வியும் | - | course மற்றும் subject |
| 3. சின்சியாரிட்டி, அன்பு, நாணயம், தைரியம், courtesy, அடக்கம், தன்மானம், நன்றியறிதல் போன்ற உயர்ந்த வேல்யுக்கள். | - | உடை, உணவு வகைகள், பேசும் பாஷை, greeting முறைகள் |
| 4. இறையார்வம், சமர்ப்பணம், சரணாகதி | - | தியான நேரம், மந்திரம், ஆன்மிகப் புத்தகங்களைப் படிப்பதன் வரிசை கிரமம், பூஜையறை அமைத்தல் |

இப்படி அடிப்படை விஷயங்களில் உறுதியாகவிருந்து கொண்டு மேலோட்டமான விஷயங்களில் flexible ஆகவிருக்க முன்வருபவர்கள் அன்னையின் creative சக்திக்கு ஒத்துழைக்கும் வகையில் நடந்து கொள்கிறார்கள் என்றாகிறது. இப்படியில்லாமல் method of functioning மற்றும் பழக்க வழக்கங்களில் பிடிவாதத்தை வெளிப்படுத்துகின்றவர்கள் அன்னையோடு ஒத்துழைக்க மறுக்கின்றார்கள் என்றாகிறது. ஓர் அன்னை பக்தரான இளைஞர் திறமைசாலியாகவும் கடின உழைப்பாளியாகவுமிருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவரிரண்டு விதமாகச் செயல்படலாம். ஒன்று சொந்தமாகத் தொழில் செய்வது. இரண்டாவது சம்பளத்திற்கு employment சேர்வது. அவர் துணிச்சலாகச் செயல்பட்டுச் சொந்தமாகத் தொழில் ஆரம்பித்தால் நிறைய சம்பாதிப்பாரென்று அன்னைக்குத்



தெரிந்தால் அன்னை அவரதைச் செய்வதைத்தான் ஆதரிப்பார். இளைஞர் தாமாக ஒரு முடிவிற்கு வாராமல் விஷயத்தை அன்னையிடம் சமர்ப்பித்து அன்னை காட்டும் வழியில் செயல்படுவதாக அன்னையிடம் சொன்னாரென்றால், சொந்தத் தொழில் செய்வதுதான் அவருக்கு நல்லதென்பதை உணர்த்தும் வகையில் அன்னை அவருக்கு அறிகுறிகள் தருவார்.

இப்படி முடிவை அன்னையிடம் விடாமல் பல தலைமுறைகளாக அவருடைய குடும்பம் employmentஐத்தான் நாடியிருக்கிறது என்பதால், அந்தப் பாணியிலேயே automatic ஆகத் தானும் செயல்பட அவர் முடிவு செய்து விடுகிறாரென்றால், அன்னை பக்தராகவிருந்தாலும் flexibility இல்லையென்பதன் காரணமாக அன்னையின் கிரியேட்டிவ் சக்தியோடு ஒத்துழைக்காமல் போகிறார்.

Dynamic ஆகச் செயல்படுகின்ற அன்னை பக்தர் ஒருவருக்கு அவருடைய தகப்பனார் தாம் proprietary concern ஆக நடத்தி வந்த நிறுவனத்தைச் சொத்தாக விட்டுவிட்டு போகிறாரென்று வைத்துக் கொள்வோம். தம்முடைய நிறுவனத்தின் வியாபார அபிவிருத்திக்காக இவ்விளைஞர் ஒரு வங்கியை அணுகி மேனேஜரிடம் கடனுதவி கேட்கும்போது, அந்த மேனேஜர் proprietary concern ஆக வைத்திருக்காமல் Pvt. Ltd concern ஆக மாற்றினீர்கள் என்றால், நீங்கள் கேட்கும் கடனுதவியை எங்களால் கொடுக்க முடியும் என்று யோசனை தெரிவித்தாரென்றால் அந்த மேனேஜர் மூலம் அன்னைதான் இந்த யோசனையை வழங்குகிறாரென்று பக்தர் புரிந்துகொள்ளவேண்டும். ஏனென்றால் proprietary concernஐவிட Ltd concern என்பது வியாபாரத்தில் அதிக முன்னேற்றம் தரக்கூடியது. Ltd concern இல் கணக்கையெல்லாம் ஒழுங்காக எழுத வேண்டும். Income tax, Sales tax எல்லாம் ஒழுங்காகக் கட்ட வேண்டும், accounts audit செய்ய வேண்டும். ஆனால் proprietary concern இல் இவற்றிற்கெல்லாம்

அவ்வளவு முக்கியத்துவம் தருவதில்லை. இதனால்தான் கடனுதவி தரவிரும்பும் வங்கிகள் Pvt. Ltd கம்பெனிகளை அதிகமாக ஆதரிக்கின்றன.

Proprietary concern வைத்திருக்குமிளைஞர் வியாபாரம் பெருகவேண்டுமென்று அன்னையிடம் பிரார்த்திக்கும்பொழுது அன்னையின் சக்தி creative ஆகச் செயல்பட்டு Ltd concern ஆக மாற்றிக்கொண்டால் வியாபார அபிவிருத்திக்கு வழி பிறக்குமென்று Bank Manager மூலம் பக்தருக்கு வழி காட்டுகிறது. அதைப் புரிந்துகொண்டு அவர் தம் நிறுவனத்தை Ltd concern ஆக மாற்றினாரென்றால், அன்னையின் creative சக்தியோடு ஒத்துழைக்கின்றார். இப்படிச் செய்யாமல் தகப்பனார் proprietary concern ஆக நடத்தியதால் தானும் அவ்வாறே நடத்துவதாகப் பிடிவாதம் செய்தாரென்றால், அவருடைய conservative மனப்பான்மை அன்னையின் அருள் அவர் வாழ்க்கையில் creative ஆகச் செயல்படுவதைத் தடுக்கிறதென்றாகிறது.

பொதுவாக நம்மிடம் எந்த உயர்ந்த அம்சம் இருந்தாலும் அதை வெளிக்கொண்டு வரத்தான் அன்னையின் அருள் செயல்படுமே தவிர நாமிருக்கின்ற நிலையிலேயே தொடர்ந்து இருப்பதை அருள் ஆதரிக்காது. சாதாரண பக்தராகவிருக்கின்ற ஒருவருக்கு பூரணயோகத்தைச் செய்யக்கூடிய சாதகனாக மாறக்கூடிய அம்சமிருப்பதாக வைத்துக்கொள்வோம். அம்சமிருந்தாலும் அவருக்கு ஆர்வம் அத்திசையில் இல்லாமல் சாதாரணக் குடும்ப வாழ்க்கை மற்றும் social life-இல் இருக்கிறதென்றால், அன்னை அதிலிருந்து அவரை மீட்டு அவருடைய உயர்ந்த அம்சத்தை அவர் மதித்து நடப்பதற்கான சூழலை உண்டு பண்ணுவார்.

பிள்ளைகளின் மேல் பாசமிருப்பதாகவிருந்தால் பிள்ளைகளை அப்பால் போகச் செய்வார். பணம், status, அதிகாரம், உற்றார்



உறவினரின் ஆதரவு என்றிவற்றைப் பெரிதாக நினைத்துக் கொண்டிருந்தாரென்றால், ஒரு பெரிய சிரமம் வரும்பொழுது இவை எதுவுமே உதவாமல் தம்முடைய அருள் மட்டுந்தான் அவரைக் காப்பாற்றுகின்றது என்பதை அவருக்குப் புரிய வைப்பார். தம்முடைய திறமை உழைப்பு பணபலம் செல்வாக்கு இவற்றை நம்பிச் செயல்படும்பொழுது அவருக்குக் காரியம் கூடி வாராமல், நம்பிக்கை, சமர்ப்பணம், சரணாகதி போன்ற அணுகு முறைகளைக் கடைப்பிடிக்கும்பொழுதுதான் காரியம் கூடிவரும்படிச் செய்வார். தியானம் செய்யும்பொழுது peace, silence, joy போன்ற உயர்ந்த ஆன்மிக அனுபவங்கள் கிடைக்கச் செய்து இதன் மூலம் தம்முடைய உயர்ந்த அம்சத்தைப் பற்றிய விழிப்புணர்வு வரும்படிச் செய்வார்.

பக்தர்களாகவிருப்பவர்களின் யோகம்சத்தை வெளிக்கொண்டு வந்து அவர்களின் தரத்தை உயர்த்துவதோடில்லாமல் பொதுவாகவே எல்லோரையும் அவர்களிருக்கின்ற நிலையிலிருந்து அடுத்த உயர்நிலைக்கு உயர்த்தும் வகையில் அவருடைய அருள் செயல்பட்டு கொண்டேவிருக்கும். Physical level இல் இருப்பவர்களை அடுத்த உயர்ந்த நிலையான உணர்வு நிலைக்கு உயர்த்துவார். உணர்வு நிலையில் இருப்பவர்களை அடுத்த உயர்நிலையான அறிவு நிலைக்கு உயர்த்துவார்.

சண்டை போட்டே காரியத்தைச் சாதித்துக் கொள்பவர்களை சண்டையில் தோல்வியைத் தழுவச் செய்து சமரசத்தை நாடும்படிச் செய்வார். கிராக்கி செய்யும் பழக்கம் கொண்டவர்களை விட்டுக் கொடுத்து பழகக்கூடிய சூழலுக்கு ஆட்படுத்துவார். சுயநலம், ஆணவம், பொறாமை, சோம்பல், அவசரம், பயம் போன்ற வேண்டாத குணங்களுக்கு அடிமையானவர்களை இதற்கு எதிர்மாறான குணங்களை வளர்த்துக் கொள்ளும்படியான சூழல்களைச் சந்திக்க வைப்பார்.

இப்படி அன்னையினுடைய அருட்சக்தி எந்நேரமும் அன்பர்களின் மனநிலையை உயர்த்தும் வகையிலேயே செயல்கொண்டிருப்பதால், அவரிடம் வருகின்ற எவருமே தம்முடைய தற்போதைய நிலையிலேயே திருப்திப்பட்டுக் கொண்டு அதைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது. இருப்பதைவிட அடுத்த உயர்நிலைக்குப் போவதற்கு அவர்களே முன்வந்து, அன்னையின் அருளோடு ஒத்துழைத்தார்களென்றால், அன்னையின் creative power அவர்களுடைய வாழ்க்கையில் மேலும் விரைவாக செயல்பட்டு நல்ல பலன்கள் கொடுக்கும்.

❊ ❊ ❊

## ஸ்ரீ அரவிந்த சுடர்

அன்பு தெய்வீக அன்பாக மாறும்பொழுது, அனந்தனின் இரகஸ்யம் வேணுகானமாக வெளிப்படும்.





# “வளரும் அருள்”

உபரி என்பது வாழ்வில் குறைவு. எதிர்ப்பார்ப்பதைவிட அதிகமான பலன் உபரியாகும். இல்லாதவர்க்கு இல்லாததைக் கொடுக்க விழையும் மனம் உபரியானது, அதற்குரிய பரிசு அருள்.

**அந்த அருளுக்கும் உபரியுண்டு.**

உபரி வாழ்வில் குறைவு, அருள் உபரியாவது கேட்டறியாத ஒன்று. அருளுக்கும் உபரியுண்டு, அந்த உபரியும் தொடரும்.

மானேஜ்மெண்ட் முறைகளைக் கற்பது சிரமம். பின்பற்றுவது மிகச் சிரமம். ஜவுளிக்கடையில் ஒரு புடவை வாங்க 4 பெண்கள் போவார்கள். 7, 8 புடவைகளைப் பார்ப்பார்கள், சில சமயங்களில் வாங்குவார்கள், சில சமயங்களில் வாங்கமாட்டார்கள். பிரித்த புடவைகளை மடித்து மீண்டும் அலமாரியில் வைக்க நேரமாகும். அது ஒரு பெரிய வேலை.

கடன் கணக்கு என்றால் முகம் சுளிக்கும். பெரிய இடம் என்றால் அதிகமாகக் கவனிப்பார்கள். மேல்நாட்டு புது மானேஜ்மெண்ட் முறை,

- ***பெரியது, சிறியது, வாங்குபவர், வாங்காதவர் அனைவருக்கும் ஒரே மாதிரியாகக் கவனிக்கவேண்டும்.***

அன்னை முறை,

- ***ஒரே மாதிரியாகக் கவனிப்பது, உள்ளத்துள் உண்மையாக இருக்கவேண்டும்.***

“இவற்றையெல்லாம் படிக்கலாம், நடக்காது”.

“அமெரிக்காவுக்குச் சரி, இங்கே நடக்காது”.

"செய்யலாம், கொஞ்ச நாளில் பயித்தியம் பிடித்துவிடும்" என்று விமர்சனம் எழும்.

ஒரு பெரிய ஸ்டோர், சேல்ஸ்மேன் அனைவரும் சூட், டையுடன் காட்சியளிப்பர். வருபவர்கள் பெரும்பாலோர் அப்படியே உடுத்தியிருப்பார்கள். இதுபோன்ற கடைகள் பிரம்மாண்டமாக இருக்கும். வீட்டில் பொழுது போகவில்லை என இதுபோன்ற கடைகளுக்கு வந்து மணிக்கணக்காகச் சுற்றிப் பார்ப்பவர்கள் உண்டு, சிறுவர்கள் வேடிக்கைக்காக வருவார்கள். $ 5 அல்லது $ 10 க்கு ரிப்பேர் செய்ய சிறு பொருள்களை வாங்குவார்கள், இதை விற்கும் சேல்ஸ்மேனுக்கு 1 மணிக்கு $ 20 முதல் $ 50 வரை சம்பளம்.

கடைக்கு இரண்டு சிறுவர்கள் வந்தார்கள். புதிய முறைப்படி இவர்களுக்கு ராஜோபசாரம் செய்தனர். 1 மணி நேரம் வியாபாரத்திற்குப் பின் $ 750க்கு **speaker** ஒலிபெருக்கி வாங்கினர். அது பெரிய வெற்றி. வியாபாரத்தைப் பற்றி விற்றவர், நல்ல வேளை $ 750 வியாபாரமாயிற்று, சிறுவர்களாயிற்றே என்று நினைத்தேன். ஆனால் அவர்களிடம் பேசும்பொழுது மனம் இதமாக இருந்தது என்றார்.

- அடுத்த நாள் அதே இருவரும் வந்தனர். $ 750க்கு மீண்டும் வாங்கினர்.
- இது கடையின் அனுபவத்திலில்லாதது.
- அடுத்த நாள் அவர்கள் மீண்டும் வந்தனர். மீண்டும் ஒரு ஸ்பீக்கர் $ 750க்கு வாங்கினர்.
- தொழிலில் இல்லாத அனுபவம் பெற்றனர் கடைக்காரர்கள். அருள் செயல்படுவதும், மீண்டும் செயல்படுவதும், மீண்டும் ஒரு முறை செயல்படுவதும் அருளின் உபரியாகும்.

❋ ❋ ❋





## திருவுருமாற்றிய தெய்வீக அன்னை

*S. அன்னபூரணி*

**"In her confirmed because transformed in her"**

'ஸ்ரீ சக்ர ராஜ நிலயா ஸ்ரீமத் திரிபுர சுந்தரி' என்று லலிதா சகஸ்ரநாம பாராயணத்தை லலிதா சொல்லி முடிக்கவும், அவள் சித்தி பர்வதம், 'லலிதா, லலிதா இன்னுமா பூஜை பண்ணுகிறாய்? போதும் சாமியை வேரோடு சாய்க்காதே. எனக்குக் கால் வலி பிராணன் போகிறது. அந்த அமிர்தாஞ்சனத்தை எடுத்துத் தடவி விட்டு சூடாக ஒரு கப் காபி கலந்து கொண்டு வா' என்று ஓலமிட்டாள். குரல் கேட்ட மாத்திரத்தில் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தவள் 'இதோ வந்திட்டேன் சித்தி' என்று உடனே பதில் குரல் கொடுத்துவிட்டு வேகமாகப் போய் அமிர்தாஞ்சனத்தை எடுத்து அவள் காலில் பரபரவென்று தேய்த்துவிட்டு, சமையலறையில் நுழைந்து நொடியில் ஆவி பறக்கும் காபியுடன் வெளியே வந்தாள்.

"இந்த வயசு வந்த பெண்ணைக் கட்டிக் காக்கும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்துவிட்டு இவளைப் பெத்த அந்த மகராசி பார்வதி போய்ச் சேர்ந்துவிட்டாள். இவள் அப்பனுக்கு இரண்டாந்தாரமாக வாக்கப்பட்டு என்ன சுகத்தைக் கண்டேன்? ஏதோ பேருக்கு இந்த வீடு இருக்கிறது. கொஞ்சம் பென்ஷனும் வருகிறது. எப்படியோ இவற்றை வைத்துக் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறேன். விலைவாசியோ நாளுக்கு நாள் ஏறிக்கொண்டிருக்கிறது. இதில் இவளுக்கு எங்கே மாப்பிள்ளை தேடி எப்படிக் கல்யாணத்தைப் பண்ணுவது? இதுவே ஒரு ஆண் குழந்தையாய் இருந்திருந்தால் இவள் அப்பா மாதிரி கோயில் குருக்களாகவாவது போயிருக்கலாம்" என்று வழக்கமான பல்லவியைப் பாடிக்கொண்டே காப்பியைக் குடித்துவிட்டு தம்ளரை தொப்பென்று வைத்தாள். லலிதா எதற்கும் முணுமுணுக்காமல், வாயைத் திறக்காமல் டம்ளரை எடுத்துப் போய்க் கழுவி வைத்துவிட்டுத் தோட்டத்துக்குப் போய் மிஞ்சியிருந்த

பூக்களைப் பறித்து மாலையாக்கி அம்பாளுக்கு சாத்தலாம் என்று கிளம்பிப் பின்புறமாகப் போனாள்.

அன்று வந்திருந்த வாரப் பத்திரிகையை எடுத்து சுவாரஸ்யத்துடன் படிக்க ஆரம்பித்தாள் பர்வதம். போன வாரம் தொடர்கதை எங்கு முடிந்தது என்று யோசித்தவாறு பக்கத்தைப் புரட்டியவள் வாசலில் நிழலாடுவதைக் கண்டு தலை நிமிர்ந்தாள்.

'அட பங்கஜமா வா வா. உன்னைப் பார்த்து எத்தனை நாளாச்சு? எங்கே இவ்வளவு தூரம்?'

'என் புக்காத்து சொந்தக்காரர்கள் வீட்டில் சதாபிஷேகம். இங்கே திருக்கடையூர் கோவிலில் பண்ணினார்கள். அப்படியே உன்னையும் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்.'

'நீ எப்படி இருக்கே பர்வதம்?'

பங்கஜத்தைப் பார்த்த மகிழ்ச்சியில் மலர்ந்திருந்த அவள் முகம் கூம்பியது. புலம்ப ஆரம்பித்தாள்.

'அதையேன் கேட்கிறாய்? எங்கள் பிறந்த வீட்டு வறுமை நிலை காரணமாய் என்னை இவருக்கு இரண்டாம் தாரமாய்க் கட்டிக் கொடுத்துவிட்டார் என் அப்பா. கடைசியில் இவரும் இந்தப் பெண்ணை என் தலையில் கட்டிவிட்டுப் போய்ச் சேர்ந்துவிட்டார்.'

'எந்தப் பெண்ணை?'

'என் மூத்தாள் பெண் லலிதாவைத்தான் சொல்கிறேன்.'

'ஏய் லலிதா, அங்கே என்ன பண்ணுகிறாய்?'

சிட்டாய்ப் பறந்து வந்த பெண்ணின் முக லட்சணத்தைப் பார்த்து அசந்துவிட்டாள் பங்கஜம். அம்பாள் சித்தாடை கட்டி வந்த மாதிரி இருந்தாள். இந்த வறுமையிலும் என்ன ஒரு செழுமை!

'நமஸ்கரிக்கிறேன் மாமி'.



'நன்றாக இரும்மா'.

அவள் உள்ளே திரும்பிப் போனதும் 'பர்வதம், இந்தப் பெண் மிகவும் பதவிசா அடக்கமா இருக்கா. நீ ரொம்ப கொடுத்து வெச்சிருக்கே. நீ சொல்லாமலே நமஸ்காரம் பண்ணின பாங்கு ஒன்றே போதும்.'

"போதுமே என்ன இருந்து என்ன? 'அ'ன விலாசம் இல்லையே."

"அதிர்ஷ்டத்துக்கென்ன குறைச்சல்?" என்று கேட்டாள் பங்கஜம்.

'நீதான் மெச்சிக் கொள்ளனும். பிறந்த உடனேயே அம்மாவை விழுங்கிவிட்டாள். இப்போது அப்பாவும் இல்லை.'

'அதற்கு அந்தக் குழந்தை என்ன செய்வாள் பாவம்'.

'நீ ரொம்ப பரிஞ்சு பேசாதே. என் நிலைமையைக் கொஞ்சம் யோசனை பண்ணிப் பார். நான் இவரைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு என்ன சுகத்தைக் கண்டேன்? இந்த வீடு இருக்கிறது. பென்ஷன் வருகிறது. இவள் தையல் தைத்துக் கொடுத்து சம்பாதிக்கிறாள்.'

'பின்னே என்ன கவலை?'

'கூட ஏதாவது வருமானம் வந்தால் சேமித்து வைத்து அந்த வருவாயில் ஏதாவது நகை நட்டு வாங்கி இவள் கல்யாணத்தை நடத்தலாம்.'

'நான் ஒரு ஐடியா சொல்கிறேன் கேள். உங்கள் இருவருக்கும் இவ்வளவு பெரிய வீடு எதுக்கு?'

'அப்படி என்ன பெரிய வீடு? ஒரு ஹால், ஒரு கிச்சன் இரண்டு ரூம் அவ்வளவுதான்.'

‘ஒரு ரூமைத் தடுத்து யாராவது பிரம்மசாரிக்கு வாடகைக்கு விட்டுவிடேன்.’

‘ஒரு வயசு வந்த பெண்ணை வைத்துக் கொண்டு இந்த மாதிரி எல்லாம் ரிஸ்க் எடுக்கத் தயாராயில்லை.’

‘எனக்குத் தெரிந்த ஒரு பையன் பாங்க்கில் அதிகாரியாக இருக்கிறான். அவனுக்கு வாடகைக்கு ஒரு இடம் வேண்டும். அது தவிர அவனுக்கு ஹோட்டல் சாப்பாடு ஒத்துக்கொள்ளாது. அதனால் வீட்டுச் சாப்பாடு போட்டுத் தங்க இடமும் தேவை. அந்தப் பையனுக்கு நான் கியாரண்டி கொடுக்கிறேன். உனக்குக் கணிசமான வருமானமும் வரும்.’

பணம் வருமென்றதும் பர்வதத்திற்கு சபலம் ஏற்பட்டது. ஒரு வழியாகச் சம்மதித்துவிட்டாள்.

‘லலிதா உனக்குப் பூ தொடுக்கத் தெரியுமா?’

‘என்ன இப்படிக் கேட்டுவிட்டாய்? குருக்கள் வீட்டுப் பெண்ணுக்குப் பூ தொடுக்கத் தெரியாதா?’ என்று இடைமறித்தாள் பர்வதம்.

‘ஒரு உதவி செய்யேன். நான் தங்கியிருக்கும் வீட்டில் இன்று ஒரு விசேஷ தியானம். அவர்கள் பாண்டிச்சேரி அன்னையின் பக்தர்கள். அவர்களுக்குப் பூக்கட்டித் தர உதவிக்கு ஆள் தேவையாம், நீ கொஞ்சம் வந்து கட்டிக் கொடுக்கிறாயா?’

வேகமாகத் தலையாட்டி சம்மதித்தாள் லலிதா.

‘ஓ வருகிறேனே, எனக்குப் பூக்கட்டுவது என்றால் ரொம்பப் பிடிக்கும்.’

அதிகம் வெளியே சென்று பழக்கமில்லாத லலிதா முதன் முதலில் வெளியே ஒரு பூஜை விஷயமாய் போவதைக் குறித்து அளவில்லாத மகிழ்ச்சியுற்றாள்.



அந்த வீட்டுக்குள்ளே நுழையுமுன்பே உள்ளிருந்து வந்த மலர்களின் வாசனையும் ஊதுபத்தி வாசனையும் கலந்த ஒரு வித நறுமணம் அவளை பரவசப்படுத்தியது. உள்ளே நுழைந்ததும் அங்கே வைத்திருந்த அன்னையின் படத்தைப் பார்த்தவள் ஸ்தம்பித்துப் போய்விட்டாள். படத்தின் மீது வைத்த கண்ணை எடுக்க முடியாமல் சிலையாக நின்றாள். அன்னையின் கண்களிலிருந்து வந்த கருணைப் பிரவாகம் அவளைக் கட்டிப் போட்டது.

‘இந்தா இந்த துளசியை மாலையாகக் கட்டு. ஏம்மா உனக்கு பக்தி உண்டா?’

‘ஆமாம் அம்பாள் மேலே எனக்கு மிகவும் பக்தி’.

‘துளசியை அன்னைக்குச் சமர்ப்பித்தால் பக்தி பெருகும்.’

லலிதா மாலை கட்டுவதும் அன்னை படத்தைத் திரும்பிப் பார்ப்பதுமாய் இருந்தாள். அந்தப் படத்திலிருந்த ஏதோ ஒரு ஆகர்ஷண சக்தி அவளை வசீகரித்தது. வாழ்விலேயே முதன் முதலாகச் சோகம் நீங்கி சொல்லொணாத நிறைவு ஏற்பட்டது அவளுக்கு. பர்வதத்திற்கு வாக்களித்தபடி தியானம் முடிந்ததும் அவளை வீட்டுக்குத் திரும்ப அழைத்துப் போய்விட்டாள் பங்கஜம்.

போகும் வழியில் லலிதா பங்கஜத்தைக் கேட்டாள்.

‘மாமி எனக்கு ஒரு சிறு உதவி செய்வீர்களா?’

‘என்னம்மா?’

‘நீங்கள் சித்தியிடம் சொல்லி வாரம் ஒரு முறையாவது இந்த வீட்டுக்கு வந்து பூக்கட்டித் தர அனுமதி வாங்கித் தரணும்.’

'ஏம்மா உங்க சித்தி நீ சொன்னால் கேட்க மாட்டாளா?'

'சித்தி ரொம்ப நல்லவர்தான் மாமி. ஏதோ அப்பப்ப கொஞ்சம் கோபம் வரும். கோபம் இருக்கும் இடத்திலேதான் குணம் இருக்கும். நீங்க அவங்க கோணத்தில் யோசனை செய்து பாருங்களேன். அப்பா இல்லையென்றால் என்ன பிடிப்பு இருக்க முடியும்? இப்பொழுது அவர்களும் இல்லையென்றால் என் நிலைமை என்ன ஆயிருக்கும்? நான் யாருமில்லாத அனாதையாக அல்லவோ இருந்திருப்பேன்.'

சித்தியை கொஞ்சமும் விட்டுக் கொடுக்காமல் பேசியதில் பங்கஜத்தின் மதிப்பில் அவள் மேலும் உயர்ந்தாள்.

'கவலைப்படாதே நான் பேசுகிற விதமாய் பேசி உனக்கு அனுமதி வாங்கித் தரேன்.'

லலிதாவுக்குச் சந்தோஷம் தாளவில்லை.

'பர்வதம், லலிதா நன்றாகப் பூக்கட்டுகிறாள். ஆகவே வாராவாரம் நடக்கும் தியானத்தின் போது பூக்கட்டித் தர அவளை அனுப்பித்தர வேண்டும் என்று அவர்கள் வீட்டில் கேட்டார்கள். அதற்கு நான் என் தோழிதான் அவள் சித்தி. அவள் அதற்குச் சம்மதிக்க மாட்டாள். இவள் இங்கு வந்து போகும்வரை அவள் எப்படித் தனியாக இருப்பாள்? என்று சொல்லிவிட்டேன்.'

'அதெல்லாம் ஒன்றுமில்லை. இவள்தான் எனக்குப் பெரிய துணையா? எனக்குத் தனியாக இருப்பது என்ன கஷ்டமா? வீட்டிலே சும்மா இருப்பதிற்குப் பதிலாக அட்லீஸ்ட் இந்த சேவையாவது செய்து விட்டு வரட்டும்.'

லலிதாவிற்குப் பங்கஜத்தின் பேசும் திறமையைக் கண்டு உள்ளுக்குள் ஒரே சிரிப்பு. கஷ்டப்பட்டு சிரிப்பை அடக்கிக் கொண்டாள். தன் சித்தியை இந்த மாமி எப்படி எடை போட்டு வைத்திருக்கிறாள்? எப்படி சாமர்த்தியமாகப் பேசினால் இவள்



சம்மதத்தை வாங்கலாம் என்று நன்கு தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறாள். பங்கஜத்திற்குக் கண்ணாலேயே தன் நன்றியைத் தெரிவித்தாள்.

பங்கஜம் ஊருக்குப் போய் ஒரு மாதம் ஆகிவிட்டது. வாரா வாரம் தவறாமல் அன்னை தியானத்திற்குப் போய் வந்து கொண்டிருந்தாள். அந்த ஞாயிற்றுக்கிழமையை நினைத்துக் கொண்டே மற்ற நாட்களை ஓட்டி விடுவாள்.

அன்று வெள்ளிக்கிழமை என்பதால் தலைக்குக் குளித்துவிட்டு ஈரத்தலையை நுனி முடிச்சிட்டு அபிராமி அந்தாதியை முணு-முணுத்துக் கொண்டே கோலம் போட்டு விளக்கேற்றிக் கொண்டிருந்த போது திடீரென்று வாசலிலிருந்து ஓர் ஆண் குரல் கேட்டது. வெளியில் வந்து எட்டிப் பார்த்தவள் முன்பின் தெரியாத ஒரு வாலிபன் கம்பீரமான தோற்றத்துடன் நின்று கொண்டிருப்பதைக் கண்டதும் சற்றுத் தடுமாறி 'நீங்க யாரு? என்ன வேணும்?'என்றாள். 'பர்வதம்மாள் வீடு இதுதானே?'

அவனை உள்ளே அழைக்கலாமா கூடாதா, சித்தி என்ன சொல்வாளோ என்று யோசித்தவாறு உள்ளே ஓடிப்போய் சித்தி யாரோ வாசலில் வந்திருக்கிறார்கள் என்றாள். 'யார் அது?' என்று கேட்டபடி வெளியே வந்தாள். பங்கஜம் மாமி என்னை அனுப்பி வைத்தார்கள். என் பெயர் சங்கர்.

'ஓ நீதான் பாங்கில் வேலை செய்யும் அந்த பிள்ளையாண்டானா? வா வா உள்ளே வா'.

உள்ளே நுழைந்தவன் தான் கொண்டு வந்திருந்த சூட்கேஸை ஓர் ஓரமாக வைத்துவிட்டு கையிலிருந்த கூடையிலிருந்து வாங்கி வந்திருந்த பழம், பூ, வெற்றிலை பாக்கு எல்லாவற்றையும் எடுத்தான். லலிதா போய் ஒரு தட்டு கொண்டு வா என்றாள் பர்வதம். தட்டில் எல்லாவற்றையும் எடுத்து வைத்தான். விளக்கேற்றவும் அம்பாளுக்குப் பூ வரவும் நல்ல சகுனமாகப் பட்டது லலிதாவுக்கு.

‘இதோ பாருப்பா சங்கர் சுற்றி வளைத்துப் பேச எனக்கு விருப்பமில்லை. இதோ இந்த அறைதான் உனக்கு. இங்கே டேபிள் பேன்தான் இருக்கிறது. காலையில் காபி, டிபன். மத்தியானம் சாப்பாடு. இரவு சாப்பாடு. வாடகையும் சாப்பாட்டுச் செலவும் சேர்ந்து ரூ. 1500/- மாதா மாதம் நீ கொடுத்துவிட வேண்டும்,’ என்று வெட்டு ஒன்று துண்டு ரெண்டாகப் பேசினாள்.

‘எனக்குச் சம்மதம்தான்’ என்று கொஞ்சமும் முகம் சுளிக்காமல் சங்கர் சொன்னது பர்வதத்திற்கு ஆச்சரியமாயிருந்தது.

‘இரவு 9 மணிக்குள் வீட்டுக்குள் வந்துவிட வேண்டும். இல்லாவிட்டால் வாசல் கேட்டைப் பூட்டிவிடுவேன்.’

‘சரி’ - பர்வதத்திற்குச் சங்கரைப் பிடித்துவிட்டது.

சங்கர் வந்து மூன்று மாதங்கள் ஓடிவிட்டன. வீட்டில் அமைதி நிலவியது. சங்கர் தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருந்தான். பர்வதத்திற்கும் இந்த அதிகப்படி வருமானம் தெம்பைக் கொடுத்தது. லலிதாவிற்கும் வாராவாரம் தியானத்திற்குப் போவதில் மகிழ்ச்சி ஏற்பட்டிருந்தது.

பங்கஜத்திடமிருந்து திடீரென்று ஒரு நாள் கடிதம் வந்தது. நான் முக்கியமான ஒரு விஷயமாக அங்கு வருகிறேன். ஓர் ஆனந்த அதிர்ச்சிக்கு நீ தயாராக இரு.

பர்வதத்திற்கு ஒன்றும் புரியவில்லை. என்னவாக இருக்கும்? பங்கஜம் வந்து இறங்கினாள். வழக்கமான விசாரிப்புகளுக்குப் பிறகு மெல்ல விஷயத்திற்கு வந்தாள்.

லலிதாவுக்கு ஒரு நல்ல வரன் வந்திருக்கு. கல்யாணத்திற்கு நீ சம்மதிக்கிறாயா?

தூக்கிவாரிப் போட்டது பர்வதத்திற்கு.



‘கல்யாணமா? பணத்துக்கு நான் எங்கே போவேன்? கையில் கால் காசு கிடையாது.’

‘நீ ஒன்றும் செலவு செய்யவேண்டாம். கட்டிய புடவையோடு லலிதாவை அனுப்பி வைத்தால் போதும்.’

‘என்னால் நம்ப முடியவில்லை. யார் பையன்? என்ன வேலை செய்கிறான்?’

பையன் வங்கியில் அதிகாரியாக இருக்கிறான். ‘பாங்க் ஆபிஸரா? இதிலே எனக்கு சந்தேகமா இருக்கு. பாங்க் ஆபிஸருக்குப் பெண்ணா கிடைக்காது? போயும் போயும் இந்த குருக்கள் வீட்டுப் பெண்ணை ஏன் கல்யாணம் செய்துக்கணும்?’

‘காரணம் இருக்கு. லலிதாவிடம் பணம், அந்தஸ்து இல்லையே தவிர அழகு, அடக்கம், திறமை, பொறுமை எல்லாம் இருக்கிறது. அந்தக் காலத்திலெல்லாம் நல்ல மாப்பிள்ளை கிடைப்பதுதான் கஷ்டம். இப்ப காலம் மாறிவிட்டது. நல்ல பெண் கிடைப்பது கூடக் கஷ்டம். கணவனுக்கு ஒத்துப்போய் நன்கு வாய்க்கு ருசியாக சமைக்கக் கூடிய பெண் கிடைப்பது அருமை.’

‘சரி போகட்டும். லலிதாவின் திறமை, அழகு எல்லாம் அந்தப் பையனுக்கு எப்படித் தெரியும்? அப்படியானால் ஏற்கனவே தெரிந்த பையனாகத்தானிருக்கும்.’

‘ஆமாம் சரியாக யூகித்துவிட்டாய். நம்ம சங்கர்தான்.’

‘சங்கரா?’ குரலை உயர்த்திக் கத்தினாள் பர்வதம்.

பங்கஜமே ஒரு கணம் ஆடிப்போய்விட்டாள்.

‘ஏய் லலிதா இங்கே வா’.

கத்தல் கேட்டுப் பதறிப் போய் ஓடி வந்தாள்.

‘எத்தனை நாட்களாக நடக்கிறது இந்த நாடகம்? கடைசியில் நான் பயந்த மாதிரியே ஆகிவிட்டது. இதற்குத்தான் வயசுப் பெண்கள் இருக்குமிடத்தில் பிரம்மச்சாரிப் பையனாகக் குடி வைக்கக் கூடாது என்று சொன்னேன்.’

லலிதா விதிர்விதிர்த்துப் போய் ‘என்ன சித்தி சொல்கிறீர்கள்? எனக்கு ஒன்றுமே புரியவில்லை’ என்றாள். பருந்தைக் கண்ட கோழிக்குஞ்சுபோல் அவள் உடல் நடுங்கியது. பர்வதம் இருக்கும் ஆவேச நிலையைப் பார்த்தால் எங்கே அவள் லலிதாவை அடித்துவிடுவாளோ என்று பயமாக இருந்தது. அவளைச் சமாதானப்படுத்தி இதோ பார் பர்வதம், லலிதா பாவம் வெகுளி. அவளுக்கு இந்த விஷயமே ஒன்றும் தெரியாது. சங்கர் இது விஷயமாக எனக்கு எழுதிய கடிதத்தைப் படிக்கின்றேன், கேள். “எனக்கு இதுவரை திருமணம் வேண்டாமென்று சொல்லிக் கொண்டிருந்தேன். பர்வதம் மாமியின் பெண் லலிதா மாதிரி ஒரு பெண் கிடைத்தால் திருமணம் செய்து கொள்ளலாமென்று தோன்றுகிறது. அவர்கள் சம்மதித்தால் சரி. இல்லாவிட்டாலும் பரவாயில்லை. சிம்பிளாகக் கல்யாணத்தை ஒரு கோவிலில் வைத்து நடத்தி தாலி கட்டினாலும் போதும். கல்யாணத்திற்குப் பிறகு பர்வதம் மாமியை வைத்துக் காப்பாற்றும் பொறுப்பையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். நானே நேரில் போய் பெண் கேட்டால் மரியாதையாக இருக்காது. என்னைப் பொறுத்தவரை எனக்கு இருக்கும் ஒரே தூரத்து உறவினர் நீங்கள்தான். ஆகவே நீங்கள் என் சார்பாக வந்து பேச வேண்டும். மாமி, லலிதா இருவரும் இதற்கு சம்மதித்தால்தான் மேற்கொண்டு திருமணப் பேச்சைத் தொடரலாம். இவர்கள் இருவரில் யாராவது ஒருவருக்கு விருப்பமில்லாவிட்டாலும் இதைப் பற்றிப் பேச வேண்டாம். அதற்காக நான் கோபித்துக் ùLôs [ UôhúPu .YZdLmúTôp paying guest ஆகத் தொடர்ந்து அவர்கள் வீட்டில் இருப்பேன். தொந்தரவுக்கு மன்னிக்கவும்.”

*தொடரும்......*

❊ ❊ ❊



## பிரார்த்தனை பலிக்க வேண்டும்

தம்பி – மீண்டும் மனம் அதையே நாடுகிறது. நேற்று என் B.A. கிளாஸ்மேட் வந்தார். அவர் பிரச்சினையைக் கூறினார்.

அண்ணன் – அதுவே பெரிய உதாரணமாயிற்றே. 1 கோடி உபரி லாபம் சம்பாதித்தார்கள் அவருடைய நண்பர்கள். அதன்பின் ஒரே ஆட்டம் ஆடினார்கள். கடனாயிற்று, உன்னால்தான் கெட்டோம் என இவர் மீது திரும்பினார்கள்.

தம்பி – அதைக் கேட்கத்தான் வந்தார். நான் தெளிவாகக் கூறிவிட்டேன். உன் சிபார்சால் 1 கோடி சம்பாதித்து விட்டு, உனக்கு இன்னும் அவர்கள் மீது பாசம். இப்பொழுது நீ சிரமப்படுகிறாய். உனக்குக் கெடுதல் செய்த அவர்கள் எப்படியாவது கடனைத் தீர்த்து நல்லபடியாக இருக்கவேண்டும் என நீ நினைப்பதால் அவர்கள் கடையை மூடவில்லை. அது உனக்குத் தவறான எண்ணம். அது உள்ளவரை உனக்கு ஆபத்து. வந்த 5 பெரும் ஆபத்தும் அவர்களால்தான் என்று கூறினேன்.

கேட்டுக் கொண்டு போய்விட்டார். அவர் போனபின் நம் மாமா நினைவு வந்தது. இவர் விஷயம் தெளிவானது. கெட்ட எண்ணப் பையனுக்குச் செல்லம் கொடுக்கிறார். அது அவர் விஷயம். நம் பேச்சை அவர் கேட்கப்போவதில்லை. வயதில் பெரியவர். புத்திமதி சொல்ல முடியாது. ஆனாலும் அவரைப் போய்ப் பார்க்க நினைத்தேன். அவர் தவறு செய்ய ஆரம்பித்ததிலிருந்து அவரைப் போய்ப் பார்த்தால் நமக்குக் கெட்ட செய்தி வருகிறது எனத் தெரியும்.

நான் எப்படிப் பிறருக்கு சொல்லமுடியும்? அப்படித் தோன்றியவுடன் ஒரு புத்தகத்தைப் பிரித்துப் பார்த்தேன். தண்டனைக்குரியவரிடம் மனம் இதமாக இருப்பது ஆபத்தை விளைவிக்கும் என்றிருந்தது. அத்தோடு அந்த எண்ணத்தை விட்டுவிட்டேன். சரி, பணத்தைப் பற்றிச் சொல்லுங்கள். என்வரைக்கும் கேட்டுக் கொள்கிறேன். பிறருக்குச் சொல்ல வேண்டும் என்பதை விட்டுவிடுகிறேன்.

அண்ணன் - 1945இல் மேற்கு ஐரோப்பா (பிரான்ஸ், இங்கிலாந்து, ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயின், ஹாலண்டு, போர்ச்சுகல், பெல்ஜியம்) தரைமட்டமாயிற்று. U.S.A. 17 பில்லியன் டாலர் கொடுத்து அந்த நாடுகளைப் புதுப்பித்தார்கள். World Bank ஏற்பட்டதே அதற்காகத்தான். அந்த 17 பில்லியன் இன்று அவர்கள் கணக்குப்படி 100 பில்லியனாகும். (இன்று 1 பில்லியன் டாலர் 4000 கோடி ரூபாய். இன்று இந்தியாவிலுள்ள அத்தனை பாங்கு டெப்பாசிட்டும் சேர்ந்த தொகை) அமெரிக்கா அதைச் சாதித்தது. உலகம் இன்றுவரை அதை மட்டுமே அறியும்.

தம்பி - இது economics படித்தவர்கட்கெல்லாம் தெரியுமே!

அண்ணன் - அதில் ஓர் விசேஷம் உண்டு. உலகம் 100 பில்லியன் டாலரால் ஐரோப்பா புதுப்பிக்கப்பட்டது என இன்று வரை நம்பினாலும், மேலும் ஒரு 100 பில்லியன் பணம் கொசுறாக வந்ததை உலகம் அறியாது.

தம்பி - அது எப்படி அவ்வளவு பணம் வந்தது தெரியாமற் போகும்? கொசுறு என்றால் 100க்கு 1 அல்லது 1½ தான். நீங்கள் முதல் 100 ஆனால் கொசுறு 200 என்கிறீர்களே?



அண்ணன் - ஏராளமான பணத்தை மனம் உற்பத்தி செய்ய முடியும் என்று நான் அதனால்தான் கூறுகிறேன். கொசுறு முதலைவிட அதிகம்!

தம்பி - சொல்லுங்க.

அண்ணன் - செட்டியார் வீட்டில் 1960இல் பாகப் பிரிவினை. 3 பேர் உடன்பிறந்தவர்கள். ஆளுக்கு 12 கோடி பிரித்துக் கொண்டனர்.

தம்பி - தெரியும்.

அண்ணன் - மூத்தவருக்கு P.A. இருந்தார். அவர் 85இல் காலமானார். அவருக்குச் சம்பளம் 500/- ரூபாய். இறக்கும்பொழுது அவருக்கு என்ன சொத்து தெரியுமா?

தம்பி - என்ன 1 லட்சமிருக்குமா?

அண்ணன் - 50 லட்சம் எனக் கேள்வி.

தம்பி - அவ்வளவு திருட முடியுமா?

அண்ணன் - P.A. நல்லவர், திருடமாட்டார், செட்டியாரிடம் திருடவும் முடியாது. செட்டியார் தமக்கு நஷ்டமில்லாமல் எவரும் பயன்படுத்த முடியாத சௌகரியங்களை P.A.க்குக் கொடுப்பார். அது 50 லட்சமாயிற்று.

தம்பி - பெரிய இடம், கொசுறு பெரியது, நீங்கள் கொசுறே முதலைவிட இரண்டு மடங்கு என்கிறீர்களே.

அண்ணன் - வெள்ளைக்கார ஆலையை 10 கோடிக்கு வாங்கியது உனக்குத் தெரியுமல்லவா?

தம்பி - சேலத்தார் வாங்கினார், அது நஷ்டமான ஆலையல்லவா?

அண்ணன் - ஆலையில் உள்ள மனையிடம் இன்று 500 கோடி பெறும். ஆலை நஷ்டமானால் என்ன?

தம்பி - கொசுறு 50 மடங்கா?

அண்ணன் - இன்று **monetary system** பணம் நடமாடும் இடத்தில் நேர்மையான முறையில் உபரி பணம் உற்பத்தி செய்ய ஏராளமான வழிகளுண்டு.

தம்பி - எப்படி 200 பில்லியன் வந்தது எனக் கூறவில்லையே.

அண்ணன் - பணம் உள்ள இடத்திலுள்ள எல்லாமே பணம்தான். நம் கண்ணுக்குத் தெரியாது. தெரிந்து நேர்மையான முறையில் அதைப் பெற முயன்றால் அளவு கடந்த பலன் உண்டு.

தம்பி - மனிதனுக்கு நேர்மையான முறை தெரியாது.

அண்ணன் - அதனால்தான் அவனுக்குத் தெரிவதில்லை. மேலும் இந்தத் தவணை முறை வந்தபிறகு பணம் அதிகமாகப் புரள்கிறது அல்லவா? அதுபோல் சொத்து - பணமில்லை - உள்ள இடத்தைச் சுற்றி ஏராளமான பணம் இருக்கிறது. அதுவும் தெரிவதில்லை.

தம்பி - எப்படி economist எல்லாம் சும்மாயிருக்கிறார்கள்?

அண்ணன் - எல்லாரும் புத்திசாலிகள்தான். அபாரப் புத்திசாலிகள் தான். அவர்கள் போகிற வழியில் இது கண்ணுக்குப் படாது.

தம்பி - கொஞ்சம் புரிகிறமாதிரி சொல்லவேண்டும்.

அண்ணன் - நம்மூர் ஆலை தெரியுமில்லையா? 170 வருஷமாக இருக்கிறது. முதல் 100 வருஷத்தில் போட்ட முதலைப் போல் 100 மடங்கு சம்பாதித்தார்கள். இன்று கரும்பு 1 டன்னுக்கு 600 ரூபாய் அன்று 10 ரூபாய். ஆலை 100 மடங்கு சம்பாதித்தது உண்மை. சுரண்டுகிறான் என நாமெல்லாம் கோஷம் போட்டோம். ஊரில் என்ன பழமொழி, கிராமத்தில் கல் வீடு என்றால் கரும்பு



குடித்தனக்காரன் என்று பழமொழி. 1950இல் தமிழ்நாட்டில் 1500 மோட்டார்கள் உண்டு. (நிலத்தில் தண்ணீர் பாய்ச்சும் மோட்டார்) அவற்றில் இந்த ஆலையைச் சுற்றி 1200 மோட்டார்கள். அந்த நாளில் பணக்காரர்கள்தான் மோட்டார் போட முடியும். 20,000 ஏக்கர் கரும்பு பயிராயிற்று. ஆலை சம்பாதித்தது எவ்வளவு? இந்த 20,000 ஏக்கர் சம்பாதித்தது எவ்வளவு எனப் பார்.

தம்பி - விவசாயிகள் அதிகமாகச் சம்பாதித்திருப்பார்களே.

அண்ணன் - இன்று உலக பாங்கிகளிலெல்லாம் பணம் உபரியாக இருக்கிறது. நம்மூரில் பாங்க் 12% வட்டி தரும். அமெரிக்காவில் 3% தான் தரும். பணம் ஏராளமாக இருக்கிறது. இதைவிட பாங்க், சர்க்கார், கம்பெனிகளைச் சுற்றி கண்ணுக்குத் தெரியாத பணம் பெருவாரியாக இருக்கிறது. சுமார் 2000 ஊர்களில் கரன்சிபோல சிறு அளவில் உலகில் நடத்துகிறார்கள். அது பரவுகிறது.

தம்பி - 200 பில்லியன் எப்படி வந்தது?

அண்ணன் - பாங்க்கைச் சுற்றியுள்ள ‘பணமுள்ள’இடங்களை சர்க்கார் அனுமதித்ததன் பேரில் இலாபகரமாகச் செயல்பட்டால் பணம் உபரியாக உற்பத்தியாகும்.

தம்பி - அது புரியவில்லை. நமக்கு புரிந்த இடங்களைச் சொல்லுங்கள்.

அண்ணன் - 10,000 ஏக்கர் பண்ணை, பெரிய ஆலை, பாங்க், சர்க்கார், ஹைகோர்ட் இதைச் சுற்றி ஏராளமான குடும்பங்கள் சம்பாதிப்பது தெரியுமா?

தம்பி - ஹைகோர்ட் கிளார்க்குக்கு மாதம் 120ரூபாய் சம்பளமிருக்கும்பொழுது, வராந்தாவில் அவசர

கேஸுக்கு டைப் அடித்துக் கொடுப்பவன் தினமும் 100ரூபாய் சம்பாதிப்பான்.

அண்ணன் - இன்று உலகில் புழங்கும் பணம், மொத்தம் உள்ள 'பணத்தில்' 10% தான் என்பது ஒரு கணக்கு. அதனால் அதிகப் பணத்தை உற்பத்தி செய்ய முடியும்.

தம்பி - அதெல்லாம் போகட்டும். நம்ம விஷயத்தைப் பேசுவோம்.

அண்ணன் - எல்லாருக்கும் உண்டானது, நமக்கும் உண்டு. நம் வருமானத்தைப் பல மடங்கு உயர்த்த முடியும். நம்மைச் சுற்றிப் பணமிருக்கிறது. நேரம் பணம், பொருள் பணம், ஒழுங்கு பணம், யோசனை பணம், குணம் பணம், நம்மைச் சார்ந்தது எதுவும் பணம் தான் என நாம் அறிவதில்லை. பணம் எப்படி உற்பத்தியாயிற்று, பணத்தினுள் என்னென்ன இருக்கிறது என்று விவரமாக அறிந்தால் நம்மிடம் ஏராளமான பணம் உற்பத்தியாக வழியுள்ளது எனப் புரியும். **மனம் சாதிக்கும் என்பதுபோல் மனம் பணத்தை உற்பத்தி செய்யும் என்று கூறலாம்.** இதுவரை யாரும் செய்யவில்லை, எவரும் இப்படிப் புரிந்து கொள்ளவில்லை என்பதால் புதிராக இருக்கிறது. யாராவது முதலில் செய்யவேண்டும். பிறகு பலர் செய்தால், அனைவரும் ஏற்பார்கள். இப்பொழுது எவரும் கேட்டுக் கொள்ளமாட்டார்கள்.

தம்பி - ஸ்ரீ அரவிந்தர் இப்படி எழுதியுள்ளாரா?

அண்ணன் - ஸ்ரீ அரவிந்தர் இதைப் பற்றி எழுதவில்லை. மற்றதைப் பற்றி எழுதியுள்ளார். அடிப்படைத் தத்துவத்தை எழுதியுள்ளார். நாம் எந்தத் துறையிலும் செய்து பார்க்க முடியும். முதல் நிபந்தனை, "பிறரை வாழவைக்கும் மனம்" பெரியது. அதைக் கடந்தவர்க்குரியது இது.



தம்பி -
- சிறியது பெரியதாகும்.
- சிறியதும் பெரியதும் ஒன்று.
- மனிதன் மறைபொருளான தெய்வம்.
- உலகம் மனிதனில் உள்ளது, போன்ற தத்துவங்களைக் கூறுகிறீர்களா?

அண்ணன் - ஆமாம். இன்று உன் கம்பெனியில் 5 கோடி வியாபாரமாகிறது. ஆனால் திடீரென 5 லட்சம் பணம் அதிலிருந்து எடுக்க முடியாது. 50 லட்சம் எடுக்க முடியும் எனில் அது உன் கம்பெனிக்கு பெரிய விஷயமாயிற்றே.

தம்பி - அதை நான் செய்யவில்லை. ஆனால் முடியும் எனத் தெரிகிறது.

அண்ணன் - அதைச் சாதித்த பின் என் விளக்கம் புரியும்.

- நம் அறிவில் $\frac{1}{10}\%$ கூட நாம் பயன்படுத்துவது இல்லை.
- நம் உடற் சக்தியில் $\frac{1}{100}\%$ கூட நாம் அறிவதில்லை என்று நாம் கேள்விப்பட்டால் நம்புவதில்லை.

தம்பி - நான் நம்புகிறேன்.

அண்ணன் - நம்புவது சரி. போதாது. செய்தால் அடுத்ததைச் சொல்லலாம். நம் சம்பாதிக்கும் திறமையில் நாம் 1% தான் பயன்படுத்துகிறோம் என்பது உண்மை.

தம்பி - நமக்கு நோய் தேவையில்லை, பிரச்சினை தேவையில்லை, கவலை தேவையில்லை, சிக்கல் தேவையில்லை என்பதுபோல் பணத்தட்டுப்பாடும் தேவையில்லையா?

அண்ணன் - இன்றைய தினம் குழந்தையைப் படிக்க வைக்க மறுப்பவர் உண்டு. உலகம் எங்கிருக்கிறது? இவர்கள்

எங்கிருக்கிறார்கள்? நாம் பணம் விஷயத்தில் அவர்களைப் போலிருக்கிறோம். அறிவு உயர்ந்தது, ஆன்மீகம் உன்னதமானது, அன்னை அவற்றைத் தாண்டியது. அன்னையின் ஆன்மீக அறிவை நாம் பெற்றுக் கொண்டோமா? நாமெல்லாம் ஆங்கிலம் படித்தவர்கள். அன்னையும் ஸ்ரீ அரவிந்தரும் 60 வால்யூம் எழுதியிருக்கிறார்கள். நாம் எத்தனைப் படித்திருக்கிறோம்? உயர்வையும், உன்னதத்தையும் கடந்த அறிவு புத்தகமாக அலமாரியில் இருக்கிறது. நாம் ஏதோ கொஞ்சம் படித்திருக்கிறோம். 1% என்று கூற முடியுமா? அதேபோல் நம் வாழ்வுக்குரிய திறமையில் சிறுபகுதியையே நாம் அறிவோம். **முழுவதையும் நாம் முதலில் அறிய வேண்டும்**. அறிவது முதலில், பெறுவது பிறகு.

தம்பி - நான் 50 லட்சத்தை என் கம்பெனியில் எடுத்துவிட்டு பிறகு கேட்கிறேன்.

அண்ணன் - அதைச் செய்தால், பணம் என்ன என்று புரிய உதவும். எல்லோரும் ஒரு தொழில் செய்கிறார்கள். அன்னையை ஏற்றபின் அதை 10 மடங்கு சிறப்பாகச் செய்ய முடியும். அதைச் செய்தவர்க்குப் பணத்தைப் பற்றிப் பேசினால் விளங்கும். அந்த அனுபவத்தில் காலம், நேரம், பொருள், சத்தம், சுத்தம், கணக்கு, ரிஜிஸ்டர், லாபம், நஷ்டம், விரயம் எல்லாம் விளங்கும். எல்லோரைப் போலவுமிருப்பவர்க்குரிய அறிவு இல்லை இது. சிறப்பானவர்க்குரியது. சொந்த வேலையில் சிறப்பெய்திய பின் பேசினால் விளங்கும்.

அண்ணன் - நம் வீட்டில் பல பொருள்களிருக்கின்றன. அவை எல்லாம் பணத்தோடு தொடர்புள்ளன. பணத்தொடர்பு இல்லாத பொருளோ, செயலோ இல்லை. நாம் பொருள்களைப் பயன்படுத்தும்பொழுது பணக்



கண்ணோட்டத்தோடு பார்ப்பதில்லை. கரண்ட் வீணாகிறது என்று பார்ப்பதுபோல், பைப்பில் தண்ணீர் வீணாகிறது என்று நினைப்பதில்லை. அதைக் கருதுபவர்களும், அலமாரியில் உள்ள புத்தகம் 350ரூபாய்க்கு வாங்கினோம். 10 பக்கம்தான் படித்தேன். அதனால் 300 ரூபாய் விரயம். 50 ரூபாய் பலன் வந்தது எனக் கருதுவதில்லை.

ஒரு வீட்டில் குழந்தை செல்லமாக இருந்தால் ஒருவருக்குத்தான் செல்லமாக இருக்கும். அத்தனை பேருக்கும் செல்லமான குழந்தை அற்புதமாக வளரும். பணம் தவிர வேறு எந்தப் பொருளும் எல்லாவற்றுடனும் தொடர்பு கொண்டிருப்பதில்லை. துணி என்றால் அதற்குக் குறிப்பிட்ட உபயோகம், சாப்பாடும் அப்படியே, கடிகாரமும் அப்படியே, எந்தப் பொருளும் சிலவற்றோடு மட்டும் தொடர்புள்ளதாக இருக்கும். **பணம் மட்டும் எல்லாப் பொருள்களுடனும், நிகழ்ச்சிகளுடனும் தொடர்புள்ளது**. பணத்திற்கு நாம் முழுக் கவனம் செலுத்துவதில்லை. தாயாரோ, தகப்பனாரோ, குழந்தைகட்கே முழுக் கவனம் செலுத்துவதில்லை. ஒரு சோதனையாகப் பணத்திற்கு முழுக் கவனம் செலுத்தினால், அதாவது எந்தப் பொருளையும், நிகழ்ச்சியையும், பண நோக்கில் கவனித்தால் நம் கவனம் பணத்திற்கு 10, 20 மடங்கு அதிகமாகும். இந்தக் கவனத்திற்கே பணம் பெருகும். முழுக் கவனம் செலுத்திய பின், கவனத்தை organise செய்ய வேண்டும். கவனம் சக்தி வாய்ந்தது. Organisation is power itself. முறை ஏராளமான சக்தி வாய்ந்தது.

**கவனமும், organisation உம் பணத்தைப் பேரளவில் பெருக்கும் திறனுடையவை.**

தம்பி – பெரும் பணத்தை மனம் உற்பத்தி செய்ய முடியும் என இப்பொழுது நம்பமுடிகிறது. மனத்தை ஓரளவு தயார் செய்து கொண்டு பிறகு வருகிறேன். Life Divine லிருந்து இதற்குப் பொருத்தமான கருத்துகளை எடுக்கமுடியுமா?

அண்ணன் – 56 அத்தியாயங்களில் 56 கருத்துண்டு. எல்லாவற்றையும் finite சிறியது infinite பெரியதாகிறது எனக் கூறலாம். அதனால் சிறு வருமானத்தைப் பெருவருமானமாக மாற்றலாம் என்று கொள்ளலாம். ஜீவாத்மாவும், பரமாத்மாவும் கொண்டுள்ள தொடர்பையும் (Eternal and the Individual என்ற அத்தியாயத்தில் கூறுவது) பெரும் பணம் உற்பத்தி செய்யும் வகையாகக் கூறலாம்.

தம்பி – பணத்தைப் பணமாகக் கருதாமல் இறைவனுடைய சக்தியாகக் கருதவேண்டும் அல்லவா?

அண்ணன் – இந்திய யோக மரபு ஜீவாத்மா, பரமாத்மாவில் கலந்து கரைகிறது என்கிறது. ஜீவாத்மாவுக்குத் தனியான இடம் தருவதில்லை. அதனால் உலகம் மாயை என்றது. உலகத்தை மாயையாக மனம் சிருஷ்டித்தது, ஜீவாத்மா சிருஷ்டித்தது, அதாவது அகங்காரம் சிருஷ்டித்தது என்ற கருத்துகள் பல வடிவங்களில் நிலவுகின்றன. ஸ்ரீ அரவிந்தம் இங்கு மாறுபடுவதை அறிய வேண்டும். ஸ்ரீ அரவிந்தம் தெளிவாக ஜீவாத்மாவே பரமாத்மா எனக் கூறுகிறது. இக்கருத்தைத் தெளிவாக ஏற்றால், அளவு கடந்த பணத்தை மனம் உற்பத்தி செய்யலாம் என்பது விளங்க உதவும்.

தம்பி – ஜீவாத்மாவுக்கும், பணத்திற்கும் என்ன சம்பந்தம்?

அண்ணன் – நம் அபிப்பிராயம் என்ன? பணம் அளவோடு கூடியது என நினைக்கிறோம். பணம் மட்டுமன்று மற்ற எத்தனையோ விஷயங்களை நாம் அப்படி நினைக்கிறோம்.



ஸ்ரீ அரவிந்தம்,

- ஜீவாத்மா என்பது அகந்தையன்று,
- புருஷனே ஜீவாத்மா,
- புருஷன் அகந்தை அழிந்தபின் அழிவதில்லை,
- எல்லா ஜீவராசிகளின் புருஷன் ஒன்றே,
- அவனைப் புறத்திலும் காணலாம்,
- அகத்திலும் காணலாம்,
- அவனே பிரபஞ்சத்தின் ஆத்மா,
- உள்ளே சென்று பார்த்தால் ஜீவாத்மா, பிரபஞ்சத்தின் ஆத்மாவினுடைய பகுதி எனத் தெரியும்.
- மேலும் தொடர்ந்தால் அவையிரண்டும் பரமாத்மாவின் பகுதிகளாகும்.
- பரமாத்மா என்பது ஜீவாத்மாவாக நமக்குத் தெரிகிறது எனக் கூறுகிறது. இது ஆன்மிக உண்மை. இது சித்தித்தால், அவர் சித்தி பெற்றவராவார். இந்த ஞானத்தை மனம் ஏற்றுக்கொண்டால், மனம் விசாலமடைகிறது. பிரபஞ்சத்தின் அளவு விசாலமடைகிறது. மனம் விசாலமடைந்தால் மனம் உற்பத்தி செய்பவையும் பிரபஞ்சத்தினளவுக்கு விசாலமடையும். அளவு கடந்து பெருகும். மனம் பணத்தை உற்பத்தி செய்யும் என்பதை விளங்கிக் கொள்பவர்க்கு, பணத்தை அளவு கடந்து உற்பத்தி செய்யலாம் எனப் புரியும். இது ஞானம். சக்தியன்று, சக்தியே சாதிக்கும்.

தம்பி – நல்லது செய்தால் மனிதர்கள் கோபப்படுகிறார்கள். செய்யாவிட்டால் நல்லபடியாகப் பழகுகிறார்கள். ஏன்?

அண்ணன் - **தராதரம் தெரியாமல் பழகுகிறோம் எனப் பொருள்**. யாருக்கு எது நல்லது என நமக்குத் தெரியவில்லை (strategy தெரியவில்லை) எனப் பொருள். குறைவாகச் செய்தாலும், அதிகமாகச் செய்தாலும் தவறு.

தம்பி - எதிர்த்த வீட்டுக்காரர் முதலாளி சம்பளம் தாராவிட்டால் நல்லபடியாக இருக்கிறார். சம்பளப் பாக்கி வந்துவிட்டால் பழைய குணம் வந்துவிடுகிறது.

அண்ணன் - பாரம் இருந்தால் கட்டுப்பாடிருக்கிறது. பாரம் இல்லாவிட்டால் கட்டுப்பாடு போய்விடுகிறது. இடம் கொடுக்கக் கூடாது என்பார்கள்.

தம்பி - நமக்கு இடம் கொடுத்தால் மடம் பிடுங்குகிறோம். **அன்னை ஆயிரம் மடங்கு இடம் கொடுப்பதை முறையாகக் கொண்டுள்ளார்கள்.** அந்த இடம் வந்தபின் சொந்தமாகக் கட்டுபாடிருந்தால் அருள் செயல்படும்.

## இது பெரிய இரகஸ்யம்

ஏன் கொடுப்பதை அன்னை நம்மால் ஏற்க முடியாத அளவுக்குக் கொடுக்கிறார்கள்?

அண்ணன் - மரம் 1 பழம் தரமுடியாது, 100 அல்லது 1000தான் அதனால் தரமுடியும் என்பது ஒரு விளக்கம். நம்மால் ஏற்பதுபோல் கொடுக்க வேண்டுமானால் ஏன் முடியாது என்பதற்கு அடுத்த காரணம் உண்டு. நம் பயிருக்கு மழை வேண்டுமானால் அன்னை எல்லோருடைய பயிருக்கும் மழையை தருகிறார். நம் கொல்லையில் மட்டும் பெய்ய முடியாது. நம் பிரார்த்தனையால் எல்லோருடைய பயிரும் மழை பெறுகிறது என சந்தோஷப்படும் மனம் நமக்கு வேண்டும். அதேபோல அதிகமாக வரும்பொழுது அதை அடக்கத்துடன் பெற்று அனுபவிக்கும் தன்மை வேண்டும்.



தம்பி - இந்தக் கதையில் டார்சி எலிசபெத்தை விரும்புவது அவளுக்குத் தெரியாது. டார்சி அவளுக்கு எட்டாக் கனி. அதே சமயம் வாழ்வு அவ்வூருக்கு விக்காமை கொண்டு வருகிறது. எலிசபெத் இரண்டில் ஒன்றை ஏற்கவேண்டும். அவள் மனம் அழகை நாடி ஆபத்தை வரவழைக்கிறது. Human choice என்பது எல்லா இடங்களுக்கும் உண்டு போலிருக்கிறது.

அண்ணன் - ஒவ்வொரு செயலிலும் human choice உண்டு. ஒவ்வொரு முறையும் அது Mother's choice ஆக இருந்தால் நாம் பக்தராவோம். பெருஞ்செல்வம் மனம் உற்பத்தி செய்ய தேவையானவற்றுள் இதுவும் ஒன்று.

தம்பி - மனம் நல்லெண்ணத்தாலும், சந்தோஷத்தாலும் பொங்கி வழிந்து ஒரு காரியத்தை - அன்னை காரியமாகச் செய்தால் - அதன் எல்லாப் பகுதிகளிலும் Mother's choice இருந்தால், அதனால் நாம் சாதாரணமாகப் பெறக்கூடிய ரூ.1000/- பலன் பத்தாயிரமாகவோ, ஒரு லட்சமாகவோ இருக்கும் என்பதுதான் அந்த இரகஸ்யமா?

அண்ணன் - இரகஸ்யத்தை பல்வேறு வகைகளாகக் கூறலாம்.

- நல்லெண்ணம், சந்தோஷம்.
- ஜீவன் நிறைந்த செயல்.
- பலன் பெற்றபின் எழும் சந்தோஷம், பெறுவதற்கு முன் வரவேண்டும்.
- முழுச் சுதந்திரம் உள்ளபொழுது முழு அடக்கம் தேவை.
- சமர்ப்பணம்.
- சிறியதும், பெரியதும் ஒன்றே.

- ஜீவாத்மாவே பரமாத்மா என அறிவது.
- பணம் உற்பத்தியாகும் எல்லா வழிகளையும் அறிவது.
- சோதனை செய்யாமல் நம்பும் மனப்பான்மை.
- பக்குவம் தேவை.
- பணத்தைவிட மனிதன் முக்கியம் என அறிவது.
- பணத்தின் மீது முழுக் கவனம், முறை.

எந்த ரூபத்தில் அன்னை ஜீவனிருந்தாலும் பணம் உபரியாகப் பெருகும். நம் மனம் நமக்கு அடங்க வேண்டும். மனம் அடங்கினால் காரியம் பெரியதாகும் (infinite).

- தொடரும்.

❉ ❉ ❉

### ஸ்ரீ அரவிந்த சுடர்

அருளில் நம்பிக்கையிருந்தால் கர்மம் தானே கரையும். நாம் கரைக்க வேண்டாம்.

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 177, Pappammal Koil Street, Pondicherry-12 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.

Editor: Karmayogi

## திருமணம்

அன்னையை அறிந்த சில மாதங்களில் திருமணப்பேச்சு எழுந்தது. கொஞ்சநாளேயானாலும், அன்னையை விட்டு அகலும் நேரம் திருமணமானாலும், மனம் ஏற்கவில்லை. எனக்குக் கடிதம் எழுதி அபிப்பிராயம் கேட்டார்.

நம்போன்றவர் அன்னையை நாடி யோகத்திற்காக வருவதில்லை. யோகத்தை மேற்கொள்ள அன்னை 1) திருமணம் 2) அரசியல் 3) மது 4) புகை ஆகிய நான்கையும் தவிர்க்கவேண்டும் என்கிறார். மதுவும், புகையும் எவருக்கும் நல்லனவல்ல. அரசியல் சிலருக்கே. திருமணம் அனைவருக்கும் தேவையானது.

**நாம் என்ன செய்கிறோம் என்பதைவிட என்ன மனப்பான்மையுடன் செய்கிறோம் என்பதே அன்னைக்குகந்தது.**

செய்யும் வேலையைச் சிறப்பாக, அன்னைக்குச் சமர்ப்பணம் செய்து செய்தால், சிறிய வேலை பெரியதாகும், மட்டமான வேலை உயர்ந்ததாகும். திருமணம் செய்து மனைவியை அன்புடன், கடமையுடன் நடத்துவது யோக முயற்சி. எனவே நான் கீழ்க்கண்ட பதிலை எழுதினேன்

“அன்னை எங்கும், எப்பொழுதும், நம்முடன் இருக்கிறார். நினைவு அவர் மீதிருந்தால் திருமணம் செய்தாலும், மறுத்தாலும் அன்னையை நெருங்கலாம். திருமணத்தின் மூலம் வளமான வாழ்வு தருகிறார். பிரம்மச்சரியத்தால் விரதமான வாழ்வு தருகிறார். இரண்டு வகைகளிலும் அன்னையை அடையலாம்”.

“அப்படியானால் நான் திருமணமே செய்து கொள்கிறேன்” என்றார் எழுதிய அன்பர்.

## கரண்டும், காரணமும்

ஓர் அன்பர் கரண்ட் விஷயத்தில் நடத்திய சோதனைகள் பல. அதனால் அவர் பல முடிவுகட்கு வந்துள்ளார்.

1) எக்காரணத்திற்காக கரண்ட் நின்றாலும், நம் பக்கத்திலிருந்து ஒரு காரணம் இருக்கும்.

2) அக்காரணம் விலக்கப்பட்டால், தவறாது கரண்ட் வரும்.

3) கவனமாகப் பார்த்தால் கரண்ட் போகும்பொழுதும், வரும்பொழுதும் நமக்குரிய தவறான காரணங்களும், சரியான காரணங்களும், தவறாமலிருக்கும்.

4) கரண்ட் போவது தவறு என்று எல்லாச் சமயங்களிலும் கூற முடியாது. நல்ல காரணங்களுக்காகவும் கரண்ட் தவறுவதுண்டு.

5) நம் புரிந்துகொள்ள முடியாத காரணங்களும் இருக்கும். ஆனால் தவறாது காரணம் என்பது இருக்கும்.

6) தவறிய கரண்ட் மீண்டும் அவசியமாக வரவேண்டும் என்ற நிலை நமக்கு நிர்ப்பந்தமாக இல்லை.

7) பாரம் மனத்தில் எதுவானாலும் அது கரண்ட் தவறுவதற்குக் காரணமாகலாம். அப்பாரம் நீங்கினால் கரண்ட் வர உதவும்.

8) நம் செயல்களும், எண்ணங்களும் கரண்ட் போகக் காரணமாக இருக்கும். அல்லது கரண்ட் நிலையை நாம் பிரதிபலிப்பதாகவுமிருக்கும்.

ஒருநாள் காலை கரண்ட் நின்றது. பக்தர் அதைக் கவனிக்காத நேரம். தம் மனத்திலோ, செயலிலோ எந்தத் தொடர்பையும் காண முடியவில்லை. மேலும் பக்தர் அதைப் பொருட்படுத்தவில்லை. தம் நண்பருடன் கேலியாகப் பேசிக் கொண்டிருந்தார். கரண்ட் பற்றி கவலைப்படவில்லை. நண்பர், ‘கம்பனிக்கு ஆர்டர் வந்துள்ளது,’ என்றார். சொல்லி முடிப்பதற்குள் கரண்ட் வந்துவிட்டது. 8 மாதமாகக் கம்பனிக்கு ஆர்டரில்லை. ஆனால் பக்தருக்கு அது conscious weight தொந்தரவு செய்யும் பாரமாக இல்லை. இருப்பினும் ஆர்டர் வந்தது, தெரியாத பாரம் விலக உதவியது. கரண்ட் நிலையை இங்கு பக்தர் மனம் நிர்ணயிக்கவில்லை என்றாலும், பிரதிபலிக்கிறது என அறிந்தார் பக்தர்.